winmeen.com

இரண்டாம் வார நடப்பு நிகழ்வுகள்

மே 2021

மே 08–14

1. 'குறிப்பிடத்தக்க பொருளாதார இருப்பு கொள்கை' என்பது எந்த வகை வரியினை விதிக்கப்பயன்படும் ஒரு கருத்துருவாகும்?

அ) வருமான வரி

ஆ) GST

இ) டிஜிட்டல் வரி ☑

ஈ) சுங்க வரி

✓ பண மசோதா 2018–19'இல் குறிப்பிடத்தக்க பொருளாதார இருப்பு கொள் –கை அறிமுகப்படுத்தப்பட்டது. தரவு அல்லது மென்பொருளைப் பதிவிறக் –குவதுபோன்ற பரிவர்த்தனைகளில், மொத்த கொடுப்பனவுகள் ஒரு குறி –ப்பிட்ட தொகையை அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பயனர் –களைக்காட்டிலும் அதிகமாக இருந்தால், அது 'வணிக இணைப்பு' நோ –க்கத்தை விரிவுபடுத்தியது.

✓ அண்மையில் இந்தியா, வரி செலுத்துவதற்கு ₹2 கோடி வருவாய் வரம் –பையும், கூகிள், பேஸ்புக் போன்ற இந்தியா சாராத தொழில்நுட்ப நிறுவ –னங்களுக்கு 300,000 பயனர்களின் வரம்பையும் அறிவித்தது.

---

2. இந்தியா, கீழ்காணும் எந்த நாட்டுடன் இணைந்து $1.4 பில்லியன் டாலர் மதிப்பிலான தனியார் துறை வர்த்தகம் மற்றும் முதலீட்டை அறிவித்துள்ளது?

அ) அமெரிக்கா

ஆ) இங்கிலாந்து ☑

இ) ரஷ்யா

ஈ) பிரேஸில்

✓ இந்தியாவும் இங்கிலாந்தும் 1 பில்லியன் பவுண்டுகள் ($1.4 பில்லியன் டாலர்) தனியார் துறை வர்த்தகம் மற்றும் முதலீட்டை அறிவித்துள்ளன. சீரம் இந்தியா நிறுவனத்தின் 240 மில்லியன் பவுண்டுகள் முதலீடும் இதில் அடங்கும். சீரம் நிறுவனம், கோடஜெனிக்ஸ் உடன் இணைந்து, COVID–19'க்கு எதிராக ஒரு டோஸ் நாசி தடுப்பூசியின் ஆரம்பக்கட்ட சோதனைகளைத்தொடங்கியுள்ளது. இந்தியாவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான வர்த்தகம் ஆண்டுக்கு சுமார் 23 பில்லியன் பவுண்டுகள் ஆக உள்ளது.

---

3. இந்தியாவில் சாலை & நெடுஞ்சாலைத்துறையில் அனுமதிக்கப்ப –ட்ட அந்நிய நேரடி முதலீட்டின் வரம்பு என்ன?

அ) 10%

ஆ) 20%

இ) 50%

ஈ) 100% ☑

✓ இந்தியாவில், சாலைகள் & நெடுஞ்சாலைத்துறையில் 100% அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. அண்மையில், மத்திய சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம் அடுத்த ஈராண்டுகளில் ₹15 இலட்சம் கோடி மதிப்புள்ள சாலை கட்டுமான இலக்கை நிர்ணயித்துள்ள –து. நடப்பாண்டில், நெடுஞ்சாலை கட்டுமானத்தின் ஒரு நாள் இலக்கை 40 கிலோமீட்டர் ஆகவும் அவ்வமைச்சகம் கொண்டுள்ளது.

---

4. அவசரகால பயன்பாட்டு பட்டியலை பயன்படுத்தி உலகெங்கிலும் உள்ள தடுப்பூசிகளின் அவசரகால பயன்பாட்டை அங்கீகரிக்கிற நிறுவனம் எது?

அ) FAO

ஆ) WHO ☑

இ) UNICEF

ஈ) CDC

✓ உலக நலவாழ்வு நிறுவனம் அதன் அவசரகால பயன்பாட்டு பட்டியல் நடைமுறையின்மூலம், தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கும் நிர்வகிப் –பதற்கும் நாடுகள் தங்கள் சொந்த ஒழுங்குமுறை ஒப்புதல் செயல்முறை –களைப் பயன்படுத்த அனுமதிக்கிறது. இது UNICEF மற்றும் நலவாழ்வு அமைப்புகளுக்கு, தேவைப்படும் நாடுகளுக்கு விநியோகிப்பதற்கான தடு –ப்பூசியை வாங்க உதவுகிறது. மாடர்னாவின் COVID–19 தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டிற்கு WHO சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

5. OECD'இன்படி, கடந்த 2020ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீட்டிற்கான முக்கிய தலமாக நின்ற நாடு எது?

அ) இந்தியா

ஆ) சீனா ☑

இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ) ஐக்கியப் பேரரசு

✓ கடந்த 2020ஆம் ஆண்டில், உலகளவில், அந்நிய நேரடி முதலீடானது கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 38% குறைந்துள்ளதாகவும் OECD (பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு) தெரிவித்துள்ளது. 2020ஆம் ஆண்டில், ஐக்கிய அமெரிக்க நாடுகளை முந்தி, சீனா, அந்நிய நேரடி முதலீட்டிற்கான முக்கிய தலமாக இருந்தது.

---

6. *Yamatosaurus izanagii* என்ற புதிய வகை வாத்தலகு டைனோசர் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நாடு எது?

அ) சீனா

ஆ) கிரேக்கம்

இ) ஜப்பான் ☑

ஈ) இந்தோனேசியா

✓ ஜப்பானின் தெற்கு தீவுகளில் ஒன்றில் ஹாட்ரோசார் அல்லது வாத்தலகு டைனோசர், *Yamatosaurus izanagii* என்ற புதிய இனத்தை தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் குழு அடையாளம் கண்டுள்ளது. இந்தக்கண்டுபிடிப்பு இவ்விலங்குகள் ஆசியாவிலிருந்து வட அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்த ஹாட்ரோசாரின் இடம்பெயர்வுபற்றிய புதிய தகவல்களை கூறுகின்றன. இவ்வுயிரினங்கள் நிமிர்ந்து நடப்பதிலிருந்து நான்கு கால்களில் நடப்பது வரை பரிணமித்தன என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது.

---

7. எந்த நாட்டின் தேசிய பெருங்கடல் & வளிமண்டல நிர்வாகம், 'புதிய காலநிலை இயல்புகளை' வெளியிட்டுள்ளது?

அ) அமெரிக்கா ☑

ஆ) ரஷ்யா

இ) சீனா

ஈ) பிரான்ஸ்

✓ அமெரிக்காவின் தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் புதிய காலநிலை இயல்புகளை வெளியிட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க நாடுகள் முழுவதும் வானிலை வெப்பமடைந்து வருவதாக இத்தரவுகள் வெளிப்படுத்துகிறன. NOAA, ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை காலநிலை இயல்புகளை வெளியிடுகிறது. மேலும் அவை, கடந்த 30 ஆண்டுகளின் தரவையும் பிரதிபலிக்கின்றன.

✓ சமீபத்தில் வெளியிடப்பட்ட தரவுத்தொகுப்பு, 1991–2020 வரையிலான சராசரி வெப்பநிலை, படிவு மற்றும் மழையை உள்ளடக்கியதாகும்.

---

8. INS கொல்கத்தா, திரவ மருத்துவ உயிர்வளி மற்றும் மருத்துவப் பொருட்களைக் கொண்டுவருவதற்காக எந்த நாட்டிலுள்ள ஷுவைக் துறைமுகத்தை சென்றடைந்தது?

அ) ஐக்கிய அரபு அமீரகம்

ஆ) குவைத் ☑

இ) ஓமன்

ஈ) இஸ்ரேல்

✓ ஆபரேஷன் சமுத்ர சேது II'இன் ஒருபகுதியாக, INS கொல்கத்தா, குவைத் துறைமுகமான ஷுவைக்கிற்கு சென்று அங்கிருந்து திரவ மருத்துவ உ –யிர்வளி மற்றும் மருத்துவ பொருட்களை கொண்டுவரும். முன்னதாக இக்கப்பல் கத்தார் தோகாவிலிருந்து 200 பாட்டில்கள் உயிர்வளி மற்றும் 43 உயிர்வளி செறிவாக்கிகளை ஏற்றிக்கொண்டது.

✓ நட்புநாடுகளிலிருந்து திரவமருத்துவ உயிர்வளியைப்பெற்றுவர இந்திய கடற்படை ஏழு இந்திய கடற்படைக் கப்பல்களை அனுப்பியுள்ளது.

---

9. 2021 மே நிலவரப்படி, மிக நீண்டகாலம் பணியாற்றிய பெண் முதலமைச்சர் யார்?

அ) ஜெ ஜெயலலிதா

ஆ) மம்தா பானர்ஜி

இ) மாயாவதி

ஈ) ஷீலா தீட்சித் ☑

✓ மம்தா பானர்ஜி மூன்றாவது முறையாக மேற்கு வங்க மாநில முதல் அமைச்சராக பதவியேற்றார். அவர், கடந்த 2011ஆம் ஆண்டு முதல் மேற்கு வங்கத்தின் முதலமைச்சராக இருந்துவருகிறார். மூத்த தலைவர் ஷீலா தீட்சித், தில்லியின் மிகநீண்டகால முதலமைச்சராகவும், எந்தவொரு இந்திய மாநிலத்தைச் சார்ந்த முதலமைச்சர்களிலும் மிக நீண்டகாலம் பணியாற்றிய பெண் முதலமைச்சராகவும் உள்ளார். அவர், 1998ஆம் ஆண்டு முதல் 15 ஆண்டுகள் முதலமைச்சராக பணியாற்றியுள்ளார்.

---

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'மேபிளவர் 400' என்றால் என்ன?

அ) சுரங்கப்பணி மேற்கொள்ளும் ரோபோ

ஆ) செயற்கை நுண்ணறிவு கப்பல் ☑

இ) சூரிய ஆய்வுத் திட்டம்

ஈ) தடுப்பூசி வழங்கும் ரோபோ

✓ 'மேபிளவர் 400' உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு கப்பலாகும். இந்தக்கப்பல், சூரிய தகடுகளால் மூடப்பட்டுள்ளது. கடல்மாசுபாடு குறித்து ஆய்வுசெய்து, தண்ணீரில் உள்ள நெகிழிகளை பகுப்பாய்வு செய்து நீர்வாழ் பாலூட்டிகளையும் இது கண்காணிக்கும். இந்தியா, அமெரிக்கா, சுவிச்சர்லாந்துபோன்ற பல்வேறு நாடுகளைச்சார்ந்த நூற்றுக்கணக்கா–ன நபர்கள் இந்தக் கப்பல் தயாரிப்பில் ஈடுபட்டனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக இறையன்பு நியமனம்

தமிழ்நாடு அரசின் புதிய தலைமைச்செயலாளராக வெ இறையன்பு இஆப நியமிக்கப்பட்டுள்ளார். இதற்குமுன் தலைமைச்செயலாளராக இருந்த ராஜீவ் ரஞ்சன், தமிழ்நாடு செய்தித்தாள் கழகத்தின் நிர்வாக இயக்குநராக மாற்றப்பட்டுள்ளார்.

எடாவது உலகத்தமிழ் மாநாடு: தமிழகத்தில் கடந்த 1995இல் எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் தனி அலுவலராக வெ இறையன்பு இஆப நியமிக்–கப்பட்டார். இதைத்தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இணை ஆணையர், செய்தி & மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் ஆகிய பதவிகளை வகித்தார்.

அரசு நிர்வாகத்தில் மட்டுமின்றி எழுத்தாளர், கட்டுரையாளர் என இலக்கிய–த்தடத்திலும் முத்திரை பதித்த, வெ இறையன்பு, தமிழ்நாடு அரசின் 48ஆவது தலைமைச் செயலாளராக பொறுப்பேற்றுள்ளார்.

---

2. பெண்களுக்கு இலவசப் பயணம் ஏன்? அரசு உத்தரவில் விளக்கம்

பெண்களுக்கு இலவசமாகப் பயணிக்க அனுமதியளித்தது ஏன்? என தமிழ்நாடு அரசு விளக்கமளித்துள்ளது. இதுகுறித்து சமூக நலத்துறைச் செயலர் தயானந்த் கட்டாரியா வெளியிட்ட உத்தரவு: 2021ஆம் ஆண்டு பொதுத்தோ'தலுக்கான முதலமைச்சரின் தேர்தல் அறிக்கையில், தமிழ்நாடு முழுவதும் இலவசமாக உள்ளூர்ப்பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணம் இல்லா பயண வசதி அளிக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். தற்போது மாறிவரும் சமூக, பொருளாதார சூழலில், பெண்கள் உயர்கல்வி பெறுவதற்கும், குடும்பத்தின் பொருளாதார தேவையை நிறைவேற்றும் பொருட்டு பணிகளுக்குச் செல்வதற்கும், சுய தொழில் புரிவதற்கும் போக்குவரத்துத் தேவை இன்றியமையாதது ஆகும்.

பெண்களின் பங்களிப்பை உயர்த்துவது அவசியம்: தமிழ்நாட்டில் பணிபுரியும் ஆண்களின் விகிதத்தைக் கணக்கில் கொள்ளும்போது பணிபுரியும் பெண்களின் விகிதம் பெருமளவு குறைவாகவே உள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, பணிகளில் பெண்களின் பங்களிப்பு 31.8 சதவீதமாகவும், ஆண்களின் பங்களிப்பு 59.3 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்குப் பெண்களும் சிறப்பான பங்களிப்பை நல்க இயலும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், பணிகளில் பெண்களின் பங்களிப்பு சதவீதத்தை உயர்த்த வேண்டியது அவசியமாகிறது. பொருளா–தார தேவைக்கு உகந்தது: உயா'கல்வி கற்பதற்காகவும், பணிநிமித்தமாக–வும், பயணம் மேற்கொள்ளும் பெண்களுக்கு பாதுகாப்பான பயணங்க–ளை அமைத்துக் கொடுப்பதும், பொதுப் போக்குவரத்து பயணங்களை ஊ–க்குவிப்பதும், பெண்களின் சமூகப்பொருளாதாரத் தேவைக்கு உகந்ததாக அமையும்.

சாதாரணக் கட்டணப் பேருந்தில் அனுமதி: இந்த நிலையில், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப்பேருந்துகளில் பணிபுரியும் மகளிர் மற்றும் உயர் கல்வி பயிலும் மாணவிகள் உள்ளிட்ட அனைத்துப் பெண்களும் கட்டணமில்லாமலும், பேருந்து பயண அட்டை இல்லாமலும் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

3. வங்கிகள் வழங்கிய கடன் 5.71% உயர்வு

வங்கிகள் வழங்கிய கடன் 2021 ஏப்ரல் 23ஆம் தேதியுடன் முடிவடைந்த இருவார காலத்தில் 5.71 சதவீதம் உயர்ந்துள்ளது. இதுகுறித்து ரிசர்வ் வங்கி புள்ளிவிவரத்தில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த ஏப்.23 தேதியுடன் நிறைவடைந்த இருவார காலத்தில் வங்கிகள் வழங்கிய கடன் 5.71% அதிகரித்து ₹108.60 லட்சம் கோடியை எட்டியது. அதேபோன்று வங்கிகள் திரட்டிய டெபாசிட்டும் 10.28% வளர்ச்சி கண்டு ₹151.34 லட்சம் கோடியைத் தொட்டது. கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்.24ஆம் தேதியுடன் முடிவடைந்த இருவார காலத்தில் வங்கிகள் வழங்கிய கடன் ₹102.73 லட்சம் கோடியாக–வும், திரட்டிய டெபாசிட் ₹137.23 லட்சம் கோடியாகவும் இருந்தன.

கடந்த 2020–21 நிதியாண்டில் வங்கிகள் வழங்கிய கடன் 5.56 சதவீதமு–ம், திரட்டிய டெபாசிட் 11.4 சதவீதமும் உயர்ந்துள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

---

4. மே 9 – உலக அன்னையர் நாள்.

---

5. உலகின் மிகப்பெரிய சரக்குவிமானம்மூலம் உயிர்வளி ஆக்கிகளை அனுப்பியது பிரிட்டன்

உலகின் மிகப்பெரிய சரக்குவிமானம்மூலம் உயிர்வளி ஆக்கிகளை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளதாக பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கரோனா 2ஆவது அலையின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. கரோனா நோயாளிகளுக்கு தேவையான ஆக்சிஜன் மற்றும் உபகரணங்–களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் உலக நாடுகள் இந்தியாவுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றன.

அவ்வகையில் 18 டன் உயிர்வளி ஆக்கிகள் மற்றும் 1,000 செயற்கை சுவாச வழங்கிகளை இந்தியாவுக்கு அனுப்பிவைத்துள்ளதாக பிரிட்டன் வெளியுறவு, காமன்வெல்த் மேம்பாட்டுத்துறை தெரிவித்துள்ளது. இந்த உயிர்காக்கும் உபகரணங்கள் ஏற்றப்பட்ட உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான அன்டனோவ்–124 பெல்பாஸ்ட் நகரிலிருந்து புறப்பட்டுள்ளது.

---

1. COVID-19 பாதிப்புக்குள்ளான ஆசிய சிங்கங்கள் உள்ள நேரு விலங்கியல் பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?

அ) ஆந்திர பிரதேசம்

ஆ) தெலங்கானா ☑

இ) ஒடிஸா

ஈ) இராஜஸ்தான்

✓ ஹைதராபாத்தில் உள்ள நேரு விலங்கியல் பூங்காவில் உள்ள எட்டு ஆசிய சிங்கங்கள் COVID-19 பாதிப்புக்கு ஆளாகியுள்ளன. இதுபோன்று இந்தியாவில் நடைபெறுவது இது முதன்முறையாகும். அதன் மாதிரிகள், செல்லுலார் மற்றும் மூலக்கூறு உயிரியல் ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டன. மேலும், RT-PCR பரிசோதனைகளின்போதும் அவை COVID-19 பாதிப்புக்கு உள்ளாகியிருந்தன. இருப்பினும், விலங்குகள் மனிதர்களுக்கு இந்நோயை பரப்புகின்றன என்பதற்கு எந்த ஆதாரமும் இதுவரை கண்டறியப்படவில்லை.

---

2. வெண்பல்கொண்ட மூஞ்சூறு இனம் முதன்முறையாக எரிமலை தீவான நார்கொண்டாம் தீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்தீவு அமைந்துள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) அந்தமான் & நிகோபார் தீவுகள் ☑

ஆ) மேற்கு வங்கம்

இ) ஒடிஸா

ஈ) நாகாலாந்து

✓ அந்தமான் & நிகோபார் தீவுக்கூட்டத்தில் உள்ள ஒரு தீவான நார்கொண்டாம் தீவில், ஒரு புதிய வகை பூச்சுண்ணும் பாலூட்டி வகையைச் சார்ந்த வெண்பல்கொண்ட மூஞ்சூறு இனத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சுண்டெலிகள் போன்ற இந்த மூஞ்சூறு இனம், பூச்சிகளை முதன்மை உணவாகக்கொண்ட ஒரு சிறிய உயிரினமாகும்.

✓ இந்த எரிமலை தீவில் கண்டறியப்பட்ட முதல் மூஞ்சூறு இனம் இதுவாகும். மேலும் இது, இந்தியாவில் கண்டறியப்பட்ட 12ஆவது வெண்பல் கொண்ட மூஞ்சூறு இனமாகும்.

3.இந்தியாவில் 5G தொழில்நுட்பத்திற்கான சோதனைகளை நடத்த தொலைதொடர்பு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கின்ற அமைப்பு எது?

அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை

ஆ) தொலைதொடர்புத்துறை ☑

இ) TRAI

ஈ) NITI ஆயோக்

✓ இந்தியாவில் 5G தொழில்நுட்பத்திற்கான சோதனைகளை நடத்துதற்கு, தொலைதொடர்பு நிறுவனங்களுக்கு, இந்திய அரசின் தொலைதொடர்பு துறை அனுமதியளித்துள்ளது. இந்நிறுவனங்கள் ஆறு மாத காலத்திற்கு கிராமப்புற, புறநகர்ப்புற மற்றும் நகர்ப்புறங்களில் சோதனைகளை நடத்துகின்றன. இதில் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கும் அமைப்பதற்குமான 2 மாத கால அவகாசமும் அடங்கும்.

---

4. UCO அடிப்படையிலான உயரி-டீசல் கலந்த டீசலின் முதல் விநியோகம் அண்மையில் தொடங்கிவைக்கப்பட்டது. UCO என்றால் என்ன?

அ) Unused Cooking Oil

ஆ) Used Cooking Oil ☑

இ) Unutilized Cooking Oil

ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

✓ பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் அடிப்படையிலான உயிரி டீசல் கலந்த டீசலின் முதல் விநியோகம் அண்மையில் புது தில்லியில் உள்ள இந்தியன் ஆயிலின் திக்ரிக்கலன் விற்பனை முனையத்திலிருந்து தொடங்கிவைக்கப்பட்டது. இவ்விழாவுக்கு பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் எஃகுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தலைமை தாங்கினார். முன்னதாக 2019ஆம் ஆண்டில், பெட்ரோலிய மற்றும் சுகாதார அமைச்சகங்கள், "பயன்படுத்திய சமையல் எண்ணெயிலிருந்து தயாரிக்கப்படும் உயரி டீசலை கொள்முதல் செய்தல்" என்பதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தின. IOCL, 2021 மார்ச் வரை 51 KL UCO-உயிரி டீசலைப் பெற்றுள்ளது.

---

5. WHO ஆதரவு அமைப்பான GINA உடன் தொடர்புடைய நோய் எது?

அ) இரத்த சோகை

ஆ) ஆஸ்துமா ☑

இ) காசநோய்

ஈ) புற்றுநோய்

✓ உலக ஆஸ்துமா நாளானது ஆஸ்துமாவிற்கான உலகளாவிய முன்னெடுப்பால் (GINA) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது, உலக நலவாழ்வு அமைப்பின் ஆதரவில், 1993ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் அமைப்பு ஆகும். உலகளவில் ஆஸ்துமா குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் உலக ஆஸ்துமா நாள் மே.5ஆம் தேதியன்று ஏற்பாடு செய்யப்படுகிறது.

✓ "Uncovering Asthma Misconceptions" என்பது நடப்பாண்டு வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும். உலகளவில் 339 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு ஆஸ்துமா இருப்பதாக WHO மதிப்பிடுகிறது.

---

6. அண்மையில் எந்தத் தேதியில், பன்னாட்டு தீயணைப்பு வீரர்கள் நாள் கடைப்பிடிக்கப்பட்டது?

அ) மே 04 ☑

ஆ) மே 05

இ) மே 06

ஈ) மே 07

✓ மனித சமூகமும் சுற்றுச்சூழலும் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யும் தீயணைப்பு வீரர்களின் தியாகங்களை அங்கீகரிக்கவும் கௌரவிப்பதற்காகவுமாக ஒவ்வோர் ஆண்டும் மே.4 அன்று பன்னாட்டு தீயணைப்பு வீரர்கள் நாள் கொண்டாடப்படுகிறது.

✓ 1999 ஜன.4 அன்று ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத்தீயைக் கட்டுப்படுத்தும் போராட்டத்தில் உயிரிழந்த ஐந்து தீயணைப்பு வீரர்களை நினைவுகூருவதற்கு ஆதரவாக உலகெங்கும் மின்னஞ்சல் மூலமாக இடம்பெற்ற பரப்புரையினை அடுத்து மே.4ஆம் தேதியை உலகெங்கும் தீயணைப்பு வீரர்கள் நாளாக நினைவுகூர முடிவுசெய்யப்பட்டது.

7.கிழக்கிந்திய கம்பெனியால் முதன்முதலில் நிலக்கரி சுரங்கப்பணி மேற்கொள்ளப்பட்ட இராணிகஞ்ச் நிலக்கரி வயல் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) ஜார்க்கண்ட்

ஆ) ஒடிஸா

இ) மேற்கு வங்கம் ☑

ஈ) பீகார்

✓ கிழக்கிந்திய கம்பெனியானது மேற்கு வங்க மாநிலத்தின் தாமோதர் ஆற்றின் மேற்குக்கரையில் அமைந்துள்ள இராணிகஞ்ச் நிலக்கரி சுரங்கத்தில், கடந்த 1774இல் முதன்முறையாக நிலக்கரி சுரங்கப்பணியைத் தொடங்கியது. ஒவ்வொரு ஆண்டும் மே.4 அன்று நிலக்கரி சுரங்கத்தொழிலாளர்கள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

---

8. பன்னாட்டு உணவு கட்டுப்பாடற்ற நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) மே 04

ஆ) மே 06 ☑

இ) மே 08

ஈ) மே 10

✓ நலமான வாழ்க்கை முறையை வளர்த்தெடுப்பதற்கும், உணவு கட்டுப்பாட்டால் ஏற்படும் இடர்கள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் மே.6 அன்று பன்னாட்டு உணவு கட்டுப்பாட்டற்ற நாள் அனுசரிக்கப்படுகிறது. இதன் சின்னம் வெளிர் நீலநிற நாடா ஆகும்.

9. புகழ்பெற்ற திரைப்பட இயக்குநரும் எழுத்தாளருமான சத்யஜித் ரே சார்ந்த மாநிலம் எது?

அ) ஒடிஸா

ஆ) அஸ்ஸாம்

இ) மேற்கு வங்கம் ☑

ஈ) மகாராஷ்டிரா

✓ சத்யஜித் ரே, ஓர் இந்திய திரைப்பட இயக்குநரும் எழுத்தாளரும் கவியும் இதழாசிரியரும் இசையமைப்பாளருமாவார். மேற்கு வங்காள மாநிலத்–தைச் சார்ந்த அவர், 1965ஆம் ஆண்டில் 'பத்ம பூஷண்', 1985'இல் 'தாதாசாகேப் பால்கே' விருது மற்றும் 'பாரத இரத்னா' ஆகியவற்றைப் பெற்றார். அவரது சாதனையை நினைவுகூரும் வகையில், இந்தியாவி–லும் வெளிநாட்டிலும் அவரின் நூற்றாண்டு கொண்டாட்ட நிகழ்வுக–ளை ஏற்பாடு செய்வதாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

---

10. 'உலகளாவிய மின்னணு வணிக அறிக்கை – 2019'இன் மதிப்பீடுகளை' வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ) IMF

ஆ) ADB

இ) UNCTAD ☑

ஈ) WTO

✓ சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்ட ஐநா வர்த்தக மற்றும் மேம்பாட்டு கூட்டமைப்பு (UNCTAD) 'உலகளாவிய மின்னணு வணிக அறிக்கை – 2019'இன் மதிப்பீடுகளை' வெளியிட்டு உள்ளது. COVID–19 கட்டுப்பாடுகள் காரணமாக, மின்னணு வணிகம் மற்றும் இணையவழி சில்லறை விற்பனையில் வியத்தகு உயர்வு ஏற்பட்டதாக அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

✓ ஐக்கிய அமெரிக்க நாடுகளைத்தொடர்ந்து ஜப்பான் & சீனா ஆகியவை உலகின் ஒட்டுமொத்த மின்னணு வணிக சந்தையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறது என்று அவ்வறிக்கை மேலும் கூறியுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அஸ்ஸாம் முதல்வராக ஹிமந்த விஸ்வ சர்மா இன்று பதவியேற்பு:

அஸ்ஸாம் மாநிலத்தின் புதிய முதலமைச்சராக ஹிமந்த விஸ்வ சர்மா பதவியேற்கிறார். அஸ்ஸாம் சட்டப்பேரவைக்கு கடந்த மாதம் தேர்தல் நடைபெற்றது. அதில் மொத்தமுள்ள 126 இடங்களில் பாஜக தலைமையிலா–ன தேசிய ஜனநாயகக் கூட்டணி 75 இடங்களில் வெற்றிபெற்று ஆட்சி–யைத் தக்கவைத்துக் கொண்டது. பாஜக மட்டும் 60 தொகுதிகளைக் கைப்பற்றியது. கூட்டணியில் இடம்பெற்றிருந்த அஸ்ஸாம் கண பரிஷத் 9 தொகுதிகளிலும், ஐக்கிய மக்கள் லிபரல் கட்சி 6 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

---

2. தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞராக R சண்முகசுந்தரம் பொறுப்பேற்பு

தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக R சண்முகசுந்தரம் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார். தமிழக முதல்வராக மு க ஸ்டாலின் பதவியேற்ற பிறகு மாநில அளவில் முக்கிய பதவிகளில் மாற்றம் நடைபெற்று வருகின்றன. மேலும், தமிழக முதல்வராக மு க ஸ்டாலின் பதவியேற்பதற்கு முன்னதாகவே தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக இருந்த விஜய நாராயணன் தனது பதவியை ராஜிநாமா செய்தார். இதையடுத்து தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக சண்முகசுந்தரத்தை நியமித்து ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் நேற்று உத்தரவிட்டார். இதையடுத்து, தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக R சண்முகசுந்தரம் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

---

3. தேவை அவசர சிகிச்சை! | மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவது குறித்த தலையங்கம்

பிரிட்டனுக்கு ஜி7 நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள நான்கு நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டிருந்தார் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர். அங்கே இந்தியத் தூதரகம் ஒருங்கிணைத்த கருத்தரங்கில் பேசும்போது, கடந்த 75 ஆண்டுகளாக இந்தியா மருத்துவக் கட்டமைப்புக்கு போதுமான அளவு முதலீடு செய்யவில்லை என்கிற எதார்த்தத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார். இப்போதாவது இது குறித்த விழிப்புணர்வும், நிஜ நிலையும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு புரியத் தொடங்கியிருக்கிறதே என்கிற அளவில் சற்று ஆறுதல்.

மருத்துவமும், சுகாதாரமும் மாநிலப் பட்டியலில் இடம் பெறுவதால், சில மாநில அரசுகள் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தாமல் விட்டதன் விளைவை கொள்ளை நோய்த்தொற்றுக் காலத்தில் நாம் எதிர்கொள்கிறோம். பொது சுகாதாரத்துக்கு எல்லா மாநில அரசுகளும் முன்னுரிமை வழங்கி கிராமப்புறங்கள் வரை முறையான மருத்துவப் பாதுகாப்பை மக்களுக்கு வழங்கியிருந்தால், கொள்ளை நோய்த்தொற்றை எதிர்கொள்வதில் இந்த அளவிலான இடர்பாடுகளை இந்தியா சந்தித்திருக்கத் தேவையில்லை.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பே இது குறித்த விவாதம் தொடங்கிவிட்டது. 2017–இல் தேசிய சுகாதாரக் கொள்கை உருவாக்கப்பட்டு, 2025–க்குள் மருத்துவத்துக்கான நிதி ஒதுக்கீடு ஜிடிபி–யில் 2.5%–ஆக அதிகரிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஒதுக்கீட்டை இரட்டிப்பாக்கி பல்வேறு மருத்துவத் தேவைகளுக்கான கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதுதான் இலக்கு. பின்தங்கிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதன் மூலம், சிகிச்சை வசதிகளை அதிகப்படுத்துவதும் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதும் 2017 தேசிய சுகாதாரக் கொள்கையின் இலக்குகள்.

செவிலியர்கள், தடுப்பூசி வழங்குபவர்கள், தொற்றுநோய் கண்காணிப்பாளர்கள், பரிசோதனைக்கூடப் பணியாளர்கள் உள்ளிட்ட துணை மருத்துவப் பணியாளர்கள் மிக அதிகமாக தேவைப்படுகிறார்கள் என்று தேசிய சுகாதாரக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவசர சிகிச்சைப் படுக்கைகள், தீவிர சிகிச்சைக் கட்டமைப்புகள் ஆகியவற்றை வலுப்படுத்துவது குறித்தும் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படியிருந்தும்கூட, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கொள்ளை நோய் தாக்கியபோது எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்கிற நிலையில்தான், 2017 தேசிய சுகாதாரக் கொள்கை காணப்பட்டது.

கடந்த 20 ஆண்டுகளாக இந்தியாவின் சுகாதாரத் தேவைக்கான அரசின் நிதி ஒதுக்கீடு ஜிடிபி–யில் 1.5%–க்கும் கீழாகவே இருந்து வருகிறது. பிரேஸில் (4%), சீனா (2.9%), ஈரான் (4.4%), அமெரிக்கா (8.6%) ஆகிய நாடுகள் சுகாதாரத்துக்கு வழங்கும் முக்கியத்துவத்தை நாம் கவனத்தில் கொள்ளாமல் போனது துரதிருஷ்டம். கடந்த ஆண்டு கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்று பரவத் தொடங்கியபோது இந்தியாவின் 410 மாவட்டங்களில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் தேசிய அளவிலான ஆய்வை மேற்கொண்டனர். கொவைட் 19–ஐ எதிர்கொள்ள எந்த அளவுக்கு மாவட்டங்கள் தயாராக இருக்கின்றன என்பதை அந்த ஆய்வு முன்னிலைப்படுத்தியது.

தீவிர சிகிச்சைக்கான வசதிகள், உயிர் காக்கும் உபகரணங்கள், மாவட்ட – தாலுகா மருத்துவமனைகளில் உள்ள படுக்கை வசதிகள், அவசர ஊர்திகள் உள்ளிட்ட கொள்ளை நோய்த்தொற்றை எதிர்கொள்வதற்கான அனைத்து மருத்துவ தேவைகள் குறித்தும் அந்த ஆய்வில் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன. அப்படியிருந்தும்கூட போதிய படுக்கை வசதிகள் இல்லாமலும், தேவைக்கேற்ற மருந்துகள் இல்லாமலும், குறைந்தபட்ச ஆக்சிஜன் வசதியை உறுதிப்படுத்தாமலும் இருந்திருக்கிறோம் என்றால் அதற்கு கவனக்குறைவும், மெத்தனமும்தான் காரணம்.

தமிழகத்தைத் தவிர, இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் மருத்துவக் கல்லூரிகள் பெரும்பாலும் பெருநகரங்களை சுற்றியே அமைந்திருக்கின்றன, குறைவாகவும் இருக்கின்றன. புதிய மருத்துவக் கல்லூரிகளும், செவிலியர் கல்லூரிகளும் பின்தங்கிய மாவட்டங்களில்தான் தொடங்கப்பட வேண்டும் என்கிற கட்டாயம் இல்லாமல் இருப்பது மிகப் பெரிய குறைபாடு. பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம், 2020 ஏப்ரல் மாதம் ஒரு புள்ளிவிவரத்தை வெளியிட்டிருக்கிறது. அதன்படி, இந்திய மருத்துவமனைகளில் 19 லட்சம் படுக்கைகள் உள்ளன. அதில் 12 லட்சம் தனியார் மருத்துவமனையில் காணப்படுகின்றன. 10,000 பேருக்கு 16 மருத்துவமனைப் படுக்கைகள் என்கிற அளவில்தான் இந்தியா இருக்கிறது. சிறிய அண்டை நாடான

இலங்கையில்கூட 10,000 பேருக்கு 42 மருத்துவமனைப் படுக்கைகள் காணப்படுகின்றன.

அதேபோல, இந்தியாவிலுள்ள அவசர சிகிச்சை படுக்கைகள் வெறும் 95,000 மட்டுமே. அதில் 59,000 தனியார் மருத்துவமனைகளில் காணப்படுகின்றன. வென்டிலேட்டர்களை எடுத்துக்கொண்டால் 47,000 வென்டிலேட்டர்களில் 29,000 தனியார் மருத்துவனைகளில்தான் காணப்படுகின்றன. முறையான திட்டமிடலும், தொலைநோக்குப் பார்வையும் இல்லாமல் போனதன் விளைவுதான் இது. வீட்டில் இருக்கும் நகை நட்டுகளையும், வங்கியில் இருக்கும் சேமிப்புகளையும், அசையாச் சொத்துகளையும் விற்று தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டிய நிலைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பொது மருத்துவமனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், கிராமங்கள் வரை மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்துவதும் எந்த அளவுக்கு அத்தியாவசியம் என்பதை கொள்ளை நோய்த்தொற்று நமக்கு கற்றுக்கொடுத்திருக்கிறது.

---

4. இந்திய ராணுவ வரலாற்றில் 'காலாட் படை போலீஸ்' பிரிவில் 83 பெண்கள் முதல் முறை சேர்ப்பு

வரலாற்றில் முதன் முறையாக இந்திய ராணுவத்தின் 'காலாட் படை போலீஸ்' பிரிவில் (மிலிட்டரி போலீஸ்) 83 பெண்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இந்திய ராணுவத்தில் காலாட் படை, விமானப்படை, கடற்படை ஆகிய 3 பிரிவுகள் உள்ளன. இந்தப் படைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரிவுகளில் மட்டும் 1990-களில் தொடங்கி பெண்கள் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். எனினும், களப்பணிகளில் அவர்களை ஈடுபடுத்தாமல் 'அதிகாரி நிலை' பதவிகளில் மட்டுமே பெண்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள். இவ்வாறு 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் நம் நாட்டின் முப்படைகளில் பணியாற்றுகின்றனர்.

இந்நிலையில், வரலாற்றில் முதன்முறையாக இந்திய ராணுவத்தின் அதிகாரி நிலை பதவி அல்லாத 'காலாட்படை போலீஸ்' பிரிவில் 83 பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 61 வாரங் கள் கடுமையான பயிற்சிக்கு பிறகு பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர்கள் முறைப்படி ராணுவத்தில் இணைக்கப்பட்டனர். இனி ஆண்டுக்கு 52 பெண்கள் வீதம் மொத்தம் 800 பேரை 'காலாட்படை போலீஸ்' பிரிவில் இணைக்க ராணுவம் திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

5. குறைந்த விலையில் திறன்மிக்க வென்டிலேட்டர்: இஸ்ரோ சாதனை

மிகக் குறைந்த விலையில் 3 வகையான வென்டிலேட்டர்களை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்து சாதனை படைத்துள்ளது. கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில், பல மாநிலங்களில் வென்டிலேட்டர், ஆக்சிஜன் செறிவூட்டிகளின் தேவை அதிகரித்து வருகிறது. இவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்நிலையில் இஸ்ரோ நிறுவனம் குறைந்த செலவில் 3 வகை வென்டிலேட்டர்களை வடிவமைத்துள்ளது. இதேபோல குறைந்தவிலை ஆக்சிஜன் செறிவூட்டிகளையும் தயாரித்துள்ளது.

திருவனந்தபுரத்தில் செயல்படும் இஸ்ரோவின் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையத்தின் இயக்குனர் சோம்நாத் கூறியதாவது: ஒரு வென்டிலேட்டர் தற்போது ரூ.5 லட்சத்துக்கு விற்கப்படுகிறது. நாங்கள் பிராணா, வாயு, ஸ்வாஸ்தா ஆகிய 3 வகையான வென்டிலேட்டர்களை வடிவமைத்துள்ளோம். இவை சர்வதேச தரத்தில் உருவாக்கப்பட்டிருப்பதை மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர். இந்த வென்டிலேட்டரை ஒரு லட்சம் ரூபாயில் வாங்க முடியும்.

வென்டிலேட்டர் தவிர குறைந்த விலை ஆக்சிஜன் செறிவூட்டிகளையும் வடிவமைத்துள்ளோம். அடுத்த ஒரு மாதத்துக்குள் வர்த்தகரீதியாக புதிய வென்டிலேட்டர், ஆக்சிஜன் செறிவூட்டிகள் உற்பத்தி துவங்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

1. துவரை, உளுந்து மற்றும் பாசிப்பயறு ஆகியவை எந்த வகை முதன்மை பயிர்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்?

அ) முன்பட்டப்பயிர் ☑

ஆ) பின்பட்டப்பயிர்

இ) பங்குனிப்பட்டப்பயிர்

ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

✓ மழைக்காலத்தில் விதைக்கப்படும் பயிர்களை இந்தியாவில் முன்பட்டப் பயிர்கள் என்று அழைக்கிறார்கள். அவை கோடை அல்லது பருவமழை காலப்பயிர்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. தென்மேற்கு பருவமழை காலத்தில் ஜூலை மாத முதல் மழையின் தொடக்கத்தோடு முன்பட்டப் பயிர்கள் விதைக்கப்படுகின்றன.

✓ துவரை, உளுந்து மற்றும் பாசிப்பயறு ஆகியவை இந்தப் பருவத்தில் விதைக்கப்படுகிற முதன்மை பருப்பு வகைகளாகும். பருப்பு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவுபெற வேளாண் அமைச்சகம் அண்மையில் ஒரு சிறப்பு முன்பட்டப் பயிர்கள் உத்தியை வகுத்துள்ளது.

---

2. காலநிலை நடவடிக்கை தடமியின் பகுப்பாய்வின்படி, 2100'க்குள் உலக வெப்பநிலை எவ்வளவுக்கு அதிகரிக்கும்?

அ) 0.5%

ஆ) 1.5%

இ) 2.4% ☑

ஈ) 3.0%

✓ 2100ஆம் ஆண்டளவில் உலகம் 2.4°C வெப்பமடையும் என காலநிலை நடவடிக்கை தடமியின் பகுப்பாய்வு கூறியுள்ளது. இது உலகளாவிய நடவடிக்கை அல்லாத வெப்பநிலையைவிட 0.2°C மட்டுமே குறைவாகும். ஆனால், கடந்த 2016'இல் கையெழுத்திடப்பட்ட காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தின்கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட 1.5°C இலக்கைவிட இம்மதிப்பீடு மிக அதிகமாக உள்ளது.

✓ 1.5°C இலக்கானது இன்னமும் சாத்தியமே என்று அதன் அறிக்கை பரிந்துரைத்துள்ளது; ஆனால் அதற்கு முக்கிய நாடுகளின் நடவடிக்கை தேவைப்படுகிறது.

---

3. COVID-19 தடுப்பூசிகளுக்கான அறிவுசார் சொத்து பாதுகாப்பைத் தள்ளுபடி செய்வதில் தொடர்புடைய அமைப்பு எது?

அ) WHO

ஆ) UNICEF

இ) WTO ☑

ஈ) FAO

✓ COVID தடுப்பூசிகளுக்கு அறிவுசார் சொத்துக்கள் பாதுகாப்பைத் தள்ளுபடி செய்வது குறித்து பல நாடுகள் உலக வர்த்தக அமைப்பை (WTO) அணுகியுள்ளன. அண்மையில், COVID-19 தடுப்பூசிகளுக்கு அறிவுசார் சொத்துக்கள் பாதுகாப்பைத் தள்ளுபடி செய்வதற்கான ஆதரவை ஐக்கிய அமெரிக்க நாடுகள் அறிவித்தது. உலக வணிக அமைப்பில் தள்ளுபடி தொடர்பான பேச்சுவார்த்தைகளை அமெரிக்கா தொடரும். அனைத்து 164 உலக வணிக அமைப்பின் உறுப்பினர்களும் வரைவுக்கு உடன்பட வேண்டும், மேலும் எந்த ஒரு உறுப்பினரும் அதை மறுக்கலாம்.

4.சமீப செய்திகளில் இடம்பெற்ற DDoS தாக்குதலுடன் தொடர்புடைய துறை எது?

அ) இராணுவம்

ஆ) இணையவெளி பாதுகாப்பு ☑

இ) கடல்சார் பயிற்சி

ஈ) உளவியல்

✓ சேவை மறுப்பு தாக்குதல் (DDoS) என்பது ஒரு கணினியோ அல்லது வலையமைப்போ தரும் சேவையை / வளங்களை அதன் மெய்யான பயனர்கள் அணுகாவண்ணம் முடக்க மேற்கொள்ளப்படும் தீயமுயற்சி ஆகும். அரசாங்கம், நாடாளுமன்றம், பல்கலைகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் உட்பட பெல்ஜியம் முழுவதும் இருநூற்றுக்கும் மேற்பட்ட அமைப்புகளின் வலைத்தளங்களை ஒரு பெரிய DdoS தாக்குதல் பாதித்தது.

✓ மே.4 அன்று தொடங்கிய இந்த DDoS தாக்குதல், நாட்டின் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசாங்க சேவைகளுக்கான இணைய சேவையை வழங்கும் பெல்னெட் நிறுவனத்தை குறிவைத்தது.

---

5. NASA'இன் பார்க்கர் சூரிய ஆய்வுக்கலமானது எந்தக்கோளின் வளிமண்டலத்தில் இயற்கையான ரேடியோ சமிக்ஞையைக் கண்டறிந்தது?

அ) செவ்வாய்

ஆ) வெள்ளி ☑



இ) பூமி

ஈ) வியாழன்

✓ NASA'இன் பார்க்கர் சோலார் ஆய்வுக்கலமானது வெள்ளியின் மேல் வளிமண்டலத்தில் பறக்கும்போது இயற்கையான ரேடியோ சிக்னலைக் கண்டறிந்தது. ஏறக்குறைய கடந்த முப்பது ஆண்டுகளில் வெள்ளியின் வளிமண்டலத்தின் அளவீடு செய்யப்பட்ட முதல் முதல் நேரடி அளவீடு இதுவாகும். இது, அந்தக்கோளின் கடந்தகால சித்தரிப்பிலிருந்து மிகவும் வித்தியாசமாக தெரிகிறது. வெள்ளியின் மேல் வளிமண்டலம் நிறைய மாற்றங்களுக்குள்ளாகிறது, எனவே இது பூமியிலிருந்து மாறுபடுகிறது.

---

6. இந்திய அரசு மற்றும் LIC'க்கு சொந்தமான எந்த வங்கியின் உத்திசார் முதலீட்டிற்கு CCEA ஒப்புதல் அளித்தது?

அ) லட்சுமி விலாஸ் வங்கி

ஆ) IDBI வங்கி ☑

இ) HDFC வங்கி

ஈ) பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கி

✓ பிரதமர் மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு (CCEA) IDBI வங்கியில் நிர்வாகக் கட்டுப்பாட்டை மாற்றுவதோடு உத்திசார் முதலீடு செய்வதற்கான அதன் கொள்கை ரீதியான ஒப்புதலையும் வழங்கியுள்ளது. எவ்வாறாயினும், இந்திய அரசு மற்றும் LIC ஆகியவற்றால் ஒதுக்கப்பட வேண்டிய பங்குதாரர்களின் அளவானது இந்திய ரிசர்வ் வங்கியுடன் (RBI) கலந்தாலோசித்து பரிவர்த்தனை சமயத்தில் தீர்மானிக்கப்படும்.

---

7. மானஸ் பிஹாரி வர்மா யார்?

அ) அரசியல்வாதி

ஆ) வானூர்தி அறிவியலாளர் ☑

இ) சமூக ஆர்வலர்

ஈ) மருத்துவர்

✓ புகழ்மிக்க வானூர்தி அறிவியலாளரான 'பத்மஸ்ரீ' மானஸ் பிஹாரி வர்மா, அண்மையில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 78. நாட்டின் முதல் இலகு இரக போர் வானூர்தியான 'தேஜாஸின்' மூளையாகச் செயல்பட்டவர் இவர். முன்னாள் குடியரசுத்தலைவர் Dr APJ அப்துல் கலாமுடன் இவர் நெருக்கமாக பணியாற்றியுள்ளார்.

---

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "செயல் திட்டம் – 2030" என்பதை எந்த நாட்டோடு இணைந்து இந்தியா ஏற்றுக்கொண்டது?

அ) சீனா

ஆ) USA

இ) UK ☑

ஈ) ஜப்பான்

✓ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோருக்கு இடையிலான ஒரு மெய்நிகர் இருதரப்பு சந்திப்பின்போது, இந்தியாவும், இங்கிலாந்தும் கூட்டாக 'செயல் திட்டம் – 2030'ஐ ஏற்றுக்கொண்டன. இந்தச் செயல் திட்டத்தை ஒரு விரிவான உத்திசார் கூட்டாண்மைக்கு உயர்த்துவதாக 2 நாட்டு தலைவர்களும் உறுதியளித்தனர். ஓர் ஒருங்கிணைந்த கட்டற்ற வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்கும் நோக்கத்துடன் ஒரு விரிவான வர்த்தக கூட்டாண்மை –யை மேற்கொள்வதாகவும் அவர்கள் அறிவித்தனர்.

---

9. 2020–21 நிதியாண்டில் MGNREGA திட்டத்தின்கீழ் அதிக எண்–ணிக்கையிலான மக்களுக்கு வேலை வழங்கிய மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம்

ஆ) மேற்கு வங்கம் ☑

இ) பீகார்

ஈ) மத்திய பிரதேசம்

- ✓ மேற்கு வங்க மாநிலமானது 11.8 மில்லியன் மக்களுக்கு, MGNREGA திட்டத்தின்கீழ், 2020–21 நிதியாண்டில் வேலை வழங்கியுள்ளது. இது, நாட்டிலேயே மிகவுயர்ந்த எண்ணிக்கையாகும். இதனை செயல்படுத்த சுமார் ₹10,403.13 கோடி நிதியை அம்மாநிலம் பயன்படுத்தியுள்ளது.
- ✓ இத்திட்டத்திற்கு நிதி செலவழிப்பதில், உத்தர பிரதேசம் மற்றும் ஆந்திர பிரதேசத்திற்கு அடுத்த நிலையில் மேற்கு வங்க மாநிலம் உள்ளது. 2021 ஏப்ரலில் சுமார் 27.3 மில்லியன் குடும்பங்கள் MGNREGA திட்டத்தின் கீழ் வேலை பெற்றுள்ளன.

10."உணவு நெருக்கடிகள்–2020" குறித்த சர்வதேச அறிக்கையை தயாரித்துள்ள அமைப்பு எது?

அ) UNCTAD

ஆ) UNEP

இ) UNWTO

ஈ) GNAFC ☑

- ✓ "உணவு நெருக்கடிகள்–2020" குறித்த சர்வதேச அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது. அது, உணவு நெருக்கடிகளுக்கு எதிரான உலகளாவி–ய வலையமைப்பால் தயாரிக்கப்பட்டதாகும். இது, தீவிர பசியின் மூல காரணங்களுக்கு தீர்வுகாண்பதற்காக செயல்பட்டுவரும் ஒரு சர்வதேச கூட்டணியாகும். இந்த அறிக்கை, உலகெங்கிலும் உள்ள உணவு நெரு–க்கடிகளுக்கு பங்களிக்கும் காரணிகளை பகுப்பாய்வு செய்கிறது.
- ✓ மேலும், COVID தொற்றுநோய் எவ்வாறு நெருக்கடியை மோசமாக்கும் என்பதையும் இந்த அறிக்கை விளக்குகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஒரு கோடி பேர் பயன்படுத்திய தேசிய டிஜிட்டல் நூலகம்: மத்திய கல்வி அமைச்சகம் தகவல்

தேசிய டிஜிட்டல் நூலகத்தில் உள்ள நூல்கள், ஒலி, காணொலி பாடங்கள் உள்ளிட்டவற்றை ஒரு கோடிக்கும் அதிகமான மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர். புத்தகங்கள், காணொலி பாடங்கள் என சுமார் 4.89 கோடி தரவுகளுடன், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காக மத்திய அரசு தேசிய டிஜிட்டல் நூலகத்தை அமைத்தது. தமிழ், ஆங்கிலம், மலையாளம், இந்தி உள்ளிட்ட 11 மொழிகளில் இந்த நூலகம் செயல்படுகிறது.

பள்ளிக்கல்வி, CBSE தேர்வுகளுக்கான தயாரிப்பு, பொறியியல், அறிவியல், மானுடவியல், இலக்கியம், சட்டம், மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பாடங்கள், ஆராய்ச்சியாளர்களின் ஆய்வறிக்கை உள்ளிட்ட 60'க்கும் மேற்பட்ட பிரிவுகளாக டிஜிட்டல் நூலகத்தில் தரவுகள் உள்ளன. இந்த டிஜிட்டல் நூலகத்தை ஐஐடி காரக்பூர் வடிவமைத்தது.

இந்நிலையில், தேசிய டிஜிட்டல் நூலகத்தில் உள்ள புத்தகம், ஆய்வறிக்கை, ஆடியோ மற்றும் காணொலி பாடங்கள் உள்ளிட்டவற்றை ஒரு கோடிக்கும் அதிகமான மாணவர்கள், ஆசிரியர்கள், ஆயாச்சியாளர்கள் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த மின்னணு நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவோர் https://ndl.iitkgp.ac.in/ என்ற இணைய முகவரிக்குள் நுழைந்து, தங்களை டிஜிட்டல் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பின்னர், அவர்களுக்கான பயனர் ஐடி, கடவுச்சொல் வழங்கப்படும். அதைப் பயன்படுத்தி, மின்னணு புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

---

2. உலகப் பட்டியலில் மூன்று தமிழகப் பல்கலைக்கழகங்கள்

QS உலகப்பல்கலைக்கழகப் பட்டியலில் 29 இந்தியக்கல்லூரிகள் இடம் பிடித்துள்ளன. இதில் பம்பாய் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் தேசிய அளவில் முதலிடத்தையும் உலக அளவில் 172ஆவது இடத்தையும் பிடித்து உள்ளது.

பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் தேசிய அளவில் இரண்டாம் இடத்தையும் தில்லி இந்திய தொழில்நுட்பக் கழகம் மூன்றாம் இடத்தையும் சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கழகம் நான்காம் இடத்தையும் (உலக அளவில் 275ஆமிடம்) பிடித்துள்ளன.

தமிழ்நாட்டைச்சார்ந்த அண்ணா பல்கலைக்கழகமும் வேலூர் தொழில்நுட்–பக் கல்லூரியும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

---

3. சேதி தெரியுமா?

மே.2: டொரண்டோ பல்கலையில் தமிழிருக்கை உறுதியானதை கனடா நாடாளுமன்றம் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

மே.4: ஊடகங்களில் பணிபுரிவோர் முன்களப் பணியாளர்களாகக் கருதப்–படுவார்கள் என்று தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்கவிருந்த மு க ஸ்டாலின் அறிவித்தார்.

மே.4: மகாத்மா காந்தியின் தனிச்செயலாளராக இருந்த வி கல்யாணம் (98), சமூக ஆர்வலர் டிராபிக் ராமசாமி (87) ஆகியோர் காலமானார்கள்.

மே.5: இந்தியாவில் முதன்முறையாக ஹைதராபாத் விலங்குக்காட்சியகத்–தில் எட்டுச்சிங்கங்களுக்கு கரோனா தொற்று உறுதியானது.

மே.5: மேற்குவங்க முதலமைச்சராக மம்தா பானர்ஜி தொடர்ந்து மூன்றாம் முறையாகப் பதவியேற்றார்.

மே.5: கரோனா பரவலையடுத்து IPL கிரிக்கெட் தொடரை ஒத்திவைப்பதா–க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்தது.

மே.6: உலக அளவில் தற்போது ஏற்படும் கரோனா பாதிப்பில் 46 சதவீதம் இந்தியாவைச் சார்ந்தது என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது.

மே.6: ICC டெஸ்ட் தரவரிசையில் முதல் பத்து இடங்களுக்குள் நுழைந்த முதல் இந்திய விக்கெட் கீப்பர் என்கிற பெருமையை ரிஷப் பந்த் பெற்றார்.

மே.7: தமிழ்நாட்டின் முதலமைச்சராக திமுக தலைவர் மு.க. ஸ்டாலினும், அவரோடு 33 அமைச்சர்களும் பதவியேற்றனர். புதுச்சேரி யூனியன் பிரதேச முதலமைச்சவராக NR காங்கிரஸ் தலைவர் N ரங்கசாமி நான்காம் முறையாகப் பதவியேற்றார்.

கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த முன்னாள் அட்டர்னி ஜெனரல் சோலி சொராப்ஜி (91) – மே 1, முன்னாள் பிரதமர் சரண் சிங்கின் மகனும் மத்திய முன்னாள் அமைச்சருமான அஜித் சிங் (82) – மே 6, நகைச்சுவை, குணச்சித்திர நடிகர் பாண்டு (74) – மே 6 ஆகியோர் உயிரிழந்தனர்.

---

1. கால்வாய் தீவுகள் என்பது ஆங்கில கால்வாயில் உள்ள ஒரு தீவுக் கூட்டமாகும். எவ்விருநாடுகளுக்கு இடையே அவை அமைந்துள்ள –ன?

அ) பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ☑

ஆ) பிரான்ஸ் மற்றும் இத்தாலி

இ) பிரான்ஸ் மற்றும் கனடா

ஈ) இத்தாலி மற்றும் ஜெர்மனி

✓ கால்வாய் தீவுகள் என்பது ஆங்கில கால்வாயில் அமைந்துள்ள ஒரு தீவுக் கூட்டமாகும். அது பிரான்சிற்கும் இங்கிலாந்துக்கும் இடையே அமைந்து உள்ளது. பிரான்ஸின் நார்மண்டி கடற்கரையிலிருந்து 22 கிலோமீட்டர் தொலைவில் அது அமைந்துள்ளது. அவற்றில் ஜெர்சியின் பெய்லிவிக் மற்றும் குர்ன்சியின் பெய்லிவிக் ஆகிய இரு தீவுகளும் பிரிட்டிஷ் அரச சார்புநிலையில் உள்ளன. இரண்டாம் எலிசபெத் பேரரசியை அவர்கள் தங்கள் மாகாணத் தலைவராக அங்கீகரிக்கிறார்கள். அந்தத் தீவுகளின் பாதுகாப்பு மற்றும் சர்வதேச உறவுகளுக்கும் இங்கிலாந்துதான் பொறுப்பு.

✓ அண்மையில், அறுபது பிரெஞ்சு மீன்பிடி படகுகள் ஜெர்சி தீவுகளை முற்றுகையிட்டன. அதைத்தொடர்ந்து இங்கிலாந்தில் இருந்து இரண்டு ராயல் கடற்படைக் கப்பல்கள் அங்கு அனுப்பப்பட்டன.

---

2. அண்மையில் எந்த மாநிலத்தின் வீட்டுவசதி ஒழுங்குமுறை சட்டத்தை அரசியலமைப்பிற்கு எதிரானது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது?

அ) கேரளா

ஆ) மேற்கு வங்கம் ☑

இ) ஒடிஸா

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ மேற்கு வங்க மாநிலத்தின் வீட்டுவசதி ஒழுங்குமுறை சட்டம் – 2017'ஐ நடுவணரசின் நிலைச்சொத்து (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டத்–துக்கு (RERA) நேரடி முரணாக இருப்பதால் இது 'அரசியலமைப்பிற்கு எதிரானது' என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

✓ இந்தத் தீர்ப்பின்படி, RERA'இன் 88 மற்றும் 89 பிரிவுகள், மாநிலங்கள் தங்களுக்கு சொந்தமான மற்றும் நடுவணரசுக்கு இணையான சட்டத்–தை உருவாக்க மறைமுகமாக அனுமதிக்கவில்லை.

---

3. உலகின் மிகப்பெரிய அந்துப்பூச்சியான இராட்சத மர அந்துப்பூச்சி, பொதுவாக கீழ்காணும் எந்த நாட்டில் காணப்படுகிறது?

அ) ஜப்பான்

ஆ) இந்தியா

இ) ஆஸ்திரேலியா ☑

ஈ) சீனா

✓ இராட்சத மர அந்துப்பூச்சிதான் உலகின் மிகப்பெரிய அந்துப்பூச்சியாகும். அதன் இறக்கைகள் சுமார் 23 செமீ நீலமுடையது. *Endoxyla cinereus* என்ற அறிவியல் பெயர்கொண்ட அவை கோசிடே குடும்பத்தைச் சார்ந்த –வையாகும். இவ்வகை அந்துப்பூச்சி பொதுவாக ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் காணப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் உள்ள குயின்ஸ்லா –ந்து பள்ளியில் 25 செமீ வரை இறக்கைகள்கொண்ட ஒரு பெரிய அந்து –ப்பூச்சி அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. மிகக்குறுகிய வாழ்க்கை சுழற்சியைக் கொண்டுள்ள அவை இனச்சேர்க்கை மற்றும் முட்டையிட்ட பிறகு இறப்பெய்துகின்றன.

4.சமீப செய்திகளில் இடம்பெற்ற லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மியுடன் தொடர்புடைய நாடு எது?

அ) UK

ஆ) உகாண்டா ☑

இ) நைஜீரியா

ஈ) ஈரான்

✓ லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மி என்பது ஒரு கிளர்ச்சிக் குழுவாகும். வடக்கு உகாண்டா, தென் சூடான், மத்திய ஆப்பிரிக்க குடியரசு & காங்கோ மக்களாட்சிக் குடியரசு உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகளில் அது செயல்படுகிறது.

✓ அண்மையில் ஒரு முக்கிய தீர்ப்பில், உகாண்டாவைச்சேர்ந்த முன்னாள் போராளித் தலைவரையும், லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மி தளபதியையும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதற்காக, பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் அவர்களுக்கு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

5.மாதாந்திர 'உணவு விலைக்குறியீடை' வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) நிதி அமைச்சகம்

இ) உணவு மற்றும் உழவு அமைப்பு ☑

ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி

✓ ஐநா அவையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு உணவு விலைக் குறியீட்டை வெளியிடுகிறது. அது தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பால் பொருட்கள், இறைச்சி மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் மாதாந்திர விலை ஏற்ற இறக்கங்களை அளவிடுகிறது. சமீபத்திய உணவு விலைக் குறியீட்டில், உலக உணவு விலைகள், ஏப்ரல் மாதத்தில் தொடர்ச்சியாக 11ஆவது மாதமாக 120.9 புள்ளிகளாக அதிகரித்தன. இது 2014 மே முதல் இந்தக் குறியீட்டின் மிகவுயர்ந்த ஏற்றமாகும். இந்த நிறுவனத்தின்படி, சர்க்கரையின் விலை உயர்வே மற்றவைகளின் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

---

6. அண்மையில் தெலங்கானா அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட 'கிளைபோசேட்' என்றால் என்ன?

அ) களைக்கொல்லி ☑



Glyphosate

ஆ) உரம்

இ) பூச்சிக்கொல்லி

ஈ) பூஞ்சைக்கொல்லி

✓ 'கிளைபோசேட்' என்பது ஒரு களைக்கொல்லியாகும். இது களைகளைக் கொல்லவும், குறிப்பாக பருத்தி பண்ணைகளில் பயன்படுத்தப்படுகிறது. பயிர்களுக்கு இணையாக வளரும் அகன்ற களைகள் மற்றும் புற்களை கொல்லவும் இது பயன்படுகிறது. இந்த இரசாயனத்தின் பரவலான பயன்பாடு (குறிப்பாக பருத்தியில்) மண்ணை மாசுபடுத்துவதோடு, மனித –ர்களுக்கு உடல்நலக்கேடுகளையும் ஏற்படுத்துவதால், சர்ச்சைக்குரிய களைக்கொல்லியான 'கிளைபோசேட்' மீது தெலங்கானா மாநில அரசு மொத்தத் தடைவிதித்துள்ளது.

7.கீழ்காணும் எந்தத் தொழில்நுட்ப நிறுவனம், மிகச்சிறிய மற்றும் ஆற்றல்வாய்ந்த 2 நானோ மீ நுண்சில்லை உருவாக்கியுள்ளது?

அ) குவால்காம்

ஆ) IBM ☑

இ) AMD

ஈ) சாம்சங்

✓ IBM, 2–நானோ மீ நுண்சில்லை உருவாக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. அது இதுவரையில் உருவாக்கப்பட்ட நுண்சில்லுகளிலேயே மிகச்சிறிய மற்றும் ஆற்றல்வாய்ந்த நுண்சில்லாகும். கணினி சில்லுகளை அடிப்ப –டையாகக்கொண்டு இயங்கிவரும் தற்கால சாதனங்கள், பெரும்பாலும் 10–நானோ மீ அல்லது 7–நானோ மீ செயல்முறை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. சில நிறுவனங்கள் 5–நானோமீட்டர் சில்லுகளை அறிமுகப்படுத்தியுள்ளன. குறைந்த எண்ணானது சில்லின் மேம்பட்ட தன்மையைக் குறிக்கின்றது.

---

8. குறைந்த ஹீமோகுளோபின் மற்றும் சிவப்பு இரத்த அணுக்களை உள்ளடக்கிய இரத்தக்கோளாறின் பெயர் என்ன?

அ) இரத்தசோகை

ஆ) தாலசீமியா ☑



இ) லுகேமியா

ஈ) ஹீமோபிலியா

✓ ரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைபாட்டால் ஏற்படும் நோய் தாலசீமியா. ஆண்டுதோறும் மே.8 அன்று உலக தாலசீமியா நாள் அனுசரிக்கப்படுகி

–றது. இந்த மரபணுக்கோளாறு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் அல்லல்களை நினைவுகூருவதே இந்நாளின் நோக்கமாகும்.

✓ "Addressing Health Inequalities Across the Global Thalassemia Community" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

9.நடப்பாண்டின் பன்னாட்டு செவிலியர் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ) Nurses: A Voice to Lead – Safe Motherhood

ஆ) Nurses A Voice to Lead – Health is a Human Right

இ) Nurses: Working with the Poor; Against Poverty

ஈ) Nurses: A Voice to Lead – A vision for future healthcare ☑

✓ 1974 ஜனவரி மாதத்தில் நவீன செவிலியர் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த ஃபுளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் மே.12 அன்று பன்னாட்டு செவிலியர் நாள் கொண்டாடப்படுகிறது. செவிலியர்கள், சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பை சிறந்த முறையில் நினைவுகூருவதற்காக இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

---

10. 1998'இல் பொக்ரானில் நடத்தப்பட்ட அணுசக்தி சோதனைகளி –ன் சாதனையைக் குறிக்கும் வகையில், மே.11 அன்று இந்தியாவில் கொண்டாடப்படுகிற சிறப்பு நாள் எது?

அ) தேசிய அணுவாற்றல் நாள்

ஆ) தேசிய தொழில்நுட்ப நாள் ☑

இ) தேசிய அணுவாயுத நாள்

ஈ) பொக்ரான் நாள்

✓ கடந்த 1998ஆம் ஆண்டில் இராஜஸ்தானின் பொக்ரானில் இந்தியா தனது அணுசக்தி சோதனைகளை நடத்திய நாளைக் குறிக்கும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் மே.11 அன்று இந்தியாவில் தேசிய தொழில்நுட்ப நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியா தனது முதல் அணுசக்தி பரிசோதனையை 1974'இல் "சிரிக்கும் புத்தர்" என்ற பெயரில் நடத்தியது.

✓ கடந்த 1998'இல் 'ஆபரேஷன் சக்தி' என்ற பெயரில், அடுத்த அணுசக்தி திட்டம் மேற்கொள்ளப்பட்டது. Dr. APJ அப்துல் கலாம், மே.11 அன்று அணு ஆயுத பரிசோதனைகளை மேற்கொண்ட அறிவியல் குழுவுக்கு தலை –மைதாங்கினார். தற்போது, அணுவாயுத திட்டத்தை வைத்திருக்கும் உலகின் எட்டு நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நாள்தோறும் 1 லட்சம் உணவுப் பொட்டலங்கள்

இந்துசமய அறநிலையத்துறை சார்பில் அரசு மருத்துவமனைகளில் COVID நோயாளிகள் உள்ளிட்டோருக்கு நாள்தோறும் 1 இலட்சம் உணவுப்பொட்ட –லங்கள் வழங்கப்படும் என அறநிலையத்துறை அமைச்சர் பி கே சேகர் பாபு தெரிவித்தார். இந்துசமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 38,661 கோவில்களுள் 754'இல் அன்னதானத்திட்டம் செயல்படுத்த –ப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

---

2. நாடு முழுவதும் 9 மருத்துவமனைகளில் NLC சார்பில் உயிர்வளி ஆலைகள்

இந்தியா முழுவதும் 9 அரசு மருத்துவமனைகளில் உயிர்வளி (ஆக்சிஜன்) உற்பத்தி ஆலைகளை நிறுவவுள்ளதாக NLC இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது. குறிப்பாக, NLC தனது மின் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு, இராஜஸ்தான், உத்தர பிரதேசம், ஒடிஸா போன்ற மாநில –ங்களில், சமூக பொறுப்புணர்வுத்திட்டத்தின்கீழ் இந்த ஆலைகளை அமைக்கிறது.

---

3. அடுத்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 10.1%ஆக இருக்கும்: ஐநா

அடுத்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளா'ச்சி 10.1 சதவீதமாக இருக்கும் என்று ஐநா தெரிவித்துள்ளது. ஐநா'இன் உலக பொருளாதார சூழல் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் அறிக்கை புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: இந்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும். அடுத்த ஆண்டு அதன் பொருளாதார வளர்ச்சி 10.1%ஆக இருக்கும். இந்த ஆண்டு சீனாவின் பொருளாதார வளர்ச்சி 8.2%ஆக இருக்கும். வரும் 2022ஆம் ஆண்டு அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி பின்னடைவைச் சந்தித்து 5.8 சதவீதமாக இருக்கும். அடுத்த ஆண்டு சீனாவை முந்திச்சென்று வேகமாக வளரும் பொருளாதாரத்தை கொண்ட நாடாக இந்தியா உருவெடுக்கும்.

இந்தியாவில் இதுவரை 100'இல் 10 பேர் என்ற விகிதத்தில் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இது அமெரிக்காவில் 100'இல் 68.2ஆகவும், ரஷியாவில் 100'இல் 12.4ஆகவும் உள்ளது என்று உள்ளது.

---

4. கேரள 'இரும்புப் பெண்மணி' கே ஆர் கௌரி காலமானார்

கேரளத்தில் 'இரும்புப்பெண்மணி' என்று அறியப்பட்டவரும் முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவருமான கே ஆர் கௌரி (102) திருவனந்தபுரத்தில் காலமானார். 'கௌரியம்மா' என்று அனைவராலும் அழைக்கப்பட்ட அவர் கேரளத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை நிறுவியவர்களில் ஒருவர்.

---

1. எந்த வகை வங்கிகளுக்கு ₹10,000 கோடி மதிப்பிலான சிறப்பு நீண்ட கால ரெப்போ நடவடிக்கையை மேற்கொள்ள ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது?

அ) கூட்டுறவு வங்கிகள்

ஆ) பிராந்திய கிராமப்புற வங்கிகள்

இ) சிறு நிதிய வங்கிகள் ☑

ஈ) கொடுப்பனவு வங்கிகள்

✓ சிறு நிதிய வங்கிகளுக்கு அதன் சிறப்பு நீண்டகால ரெப்போ நடவடிக்–கைகளுக்காக ₹10,000 கோடி மதிப்பிலான முதல் ஏலத்தை, ரெப்போ விகிதத்தில், ஒவ்வொரு மாதமும் நடத்த இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது. இது ஒரு கடன் வாங்குபவருக்கு ₹10 இலட்சம் வரை புதிய கடனை வழங்கும் மற்றும் சிறு வணிக நிறுவனங்கள், நுண் மற்றும் சிறு தொழில்கள் மற்றும் பிற அமைப்புசாரா துறை நிறுவனங்களுக்கும் ஆதரவளிக்கும். இந்த வசதி அக்டோபர் 31, 2021 வரை கிடைக்கும்.

---

2. எந்த நாடு உருவாக்கிய சினோபார்ம் தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டிற்கு WHO ஒப்புதல் அளிக்கவுள்ளது?

அ) சீனா ☑

ஆ) ரஷ்யா

இ) இந்தியா

ஈ) இஸ்ரேல்

✓ உலக நலவாழ்வு அமைப்பு இறுதியாக அவசரகால பயன்பாட்டிற்காக சினோபார்ம் COVID–19 தடுப்பூசிக்கு நிபந்தனை ஒப்புதல் அளித்துள்ளது. சீனா உருவாக்கிய சினோபார்ம் தடுப்பூசி ஏற்கனவே 45 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சீனா தனது ஐந்து தடுப்பூசிகளுக்கு அவசரகால பயன்பாட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் உள்நாட்டு பயன்பாடு மற்றும் ஏற்றுமதிக்கு சினோபார்ம் மற்றும் சினோவாக் தடுப்பூசிகளை சீனா பயன்படுத்துகிறது.

---

3. ஆயுஷ் விநியோக இயக்கத்தில் சேர்க்கப்பட்ட கபசுர குடிநீர், எந்த மருத்துவ முறையைச் சார்ந்த ஒரு மாமருந்தாகும்?

அ) ஆயுர்வேதம்

ஆ) சித்த மருத்துவம் ☑

இ) ஹோமியோபதி

ஈ) யுனானி

✓ COVID–19 தொற்றின் இரண்டாவது அலையைக் கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில், மருத்துவமனையில் அனுமதிக்கப்படாத பெருவாரியா–ன COVID நோயாளிகளுக்கு பல மூலிகைகளின் கலவை மருந்தான ஆயுஷ் 64 மற்றும் சித்த மருத்துவத்தின் கபசுரக்குடிநீரை நாடு முழுவது–ம் வழங்கும் மாபெரும் திட்டத்தை ஆயுஷ் அமைச்சகம் தொடங்குகிறது. இந்த இரண்டு மருந்துகளும் சிறப்பாகச் செயல்படுவதாக பலதரப்பட்ட மருத்துவச் சோதனைகளில் தெரியவந்துள்ளது.

---

4. இந்திய COVID மாறுபாட்டை Variant of Concern என வகைப்படு–த்திய நாடு எது?

அ) ஆஸ்திரேலியா



ஆ) ஐக்கியப் பேரரசு ☑

இ) சீனா

ஈ) ரஷ்யா

✓ இங்கிலாந்தில் உள்ள சுகாதார அதிகாரிகள், இந்திய மாறுபாட்டின் ஒரு துணை வகையை விசாரணை பிரிவின் கீழிருந்து ஒரு "Variant of Concern" என வகைப்படுத்தியுள்ளனர். இங்கிலாந்தில் பாதிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து, சமூக பரவலானதைத் தொடர்ந்து இந்நடவடி–க்கை எடுக்கப்பட்டுள்ளது.

✓ அதிகாரப்பூர்வமாக B.1.617 என அழைக்கப்படும் அசல் இந்தியா மாறுபாடு முதன்முதலில் அக்டோபரில் கண்டறியப்பட்டது, மேலும் B.1.617.2 மாறுபா–டு அதிக பரவல் திறன் கொண்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

---

5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'கலிபோர்னியா கான்டார்' என்றால் என்ன?

அ) அருங்காட்சியகம்

ஆ) கலை வடிவம்

இ) பறவை இனங்கள் ☑

ஈ) கிரிப்டோகரன்சி

✓ 'கலிபோர்னியா கான்டார்' என்பது 'புதிய உலக' கழுகு இனத்தைச் சேர்ந்த ஒரு கழுகு இனமாகும். இது மிகப்பெரிய வட அமெரிக்க நிலப் பறவையாகும். கடந்த 1987ஆம் ஆண்டில் இந்தப் பறவை, காடுகளில் இருந்து முற்றாக அழிந்ததாகக் கூறப்பட்டது. அண்மையில், அழிவின் விளிம்பிலிருக்கும் இந்தப் பறவையினம், கலிபோர்னியாவின் தெகச்சாபி நகரில் உள்ள ஒரு வீட்டில் கூட்டமாக காணப்பட்டதாக கூறப்படுகிறது.

---

6. காலநிலை & தூய வளி கூட்டணியானது, எந்த அமைப்புடன் இணைந்து உலகளாவிய மீத்தேன் மதிப்பீட்டு அறிக்கையை வெளி–யிட்டுள்ளது?

அ) UNFCCC

ஆ) UNCTAD

இ) UNEP ☑

ஈ) UNDP

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டத்துடன் (UNEP) இணைந்து காலநிலை மற்றும் தூய வளி கூட்டணியானது "உலகளாவிய மீத்தேன் மதிப்பீடு" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கை குறிப்பாக புதைபடிவ எரிபொருள் துறைசார்ந்த மீத்தேன் உமிழ்வைக் குறைப்பதன் மூலம் வரும் பயன்களையும், புவி வெப்பமடைதலின் தாக்கங்களையும் வெளிப்படுத்துகிறது.

---

7. "ID–Art" செயலியை தொடங்கியுள்ள அமைப்பு எது?

அ) ரிசர்வ் வங்கி

ஆ) CBDT

இ) CBIC

ஈ) இன்டர்போல் ☑

✓ இன்டர்போல், "ID–Art" என்ற திறன்பேசி செயலியை வெளியிட்டுள்ளது. இந்தச் செயலி, களவாடப்பட்ட கலாச்சார சொத்துக்களை அடையாளம் காணவும், சட்டத்துக்குப்புறம்பான கடத்தலைக் குறைக்கவும், திருடப்பட்–ட படைப்புகள் மற்றும் கலைப்பொருட்களை மீட்டெடுப்பதற்கான வாய்ப்–புகளை அதிகரிக்கவும் உதவும்.

✓ திருடப்பட்ட கலைப்படைப்புகளுக்கான இன்டர்போலின் தரவுத்தளத்தை அணுக, உலகெங்குமுள்ள சட்ட அமலாக்க நிறுவனங்களால் பயன்படுத்–த இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதை பொதுமக்களும் அணுகலாம்.

---

8. ஐரோப்பிய முதலீட்டு வங்கியானது எந்த இந்திய வங்கியுடன், காலநிலையை மையமாகக்கொண்ட, சரி ஒப்பு நிதியுதவிக்கான ஓர் ஒப்பந்தத்தில் நுழைந்துள்ளது?

அ) பரோடா வங்கி

ஆ) பாரத வங்கி ☑

இ) பஞ்சாப் தேசிய வங்கி

ஈ) HDFC வங்கி

✓ காலநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மையை மையமாகக் கொண்ட இந்திய சிறு வணிகங்களுக்கு, சரிஒப்பு நிதியுதவியை வழங்குவதற்காக ஐரோப்பிய முதலீட்டு வங்கி பாரத வங்கியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தம், 100 மில்லியன் யூரோ மதிப்புடையதாகும். இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்காக இரு வங்கிகளும் "NEEV FUND I" என்ற புதிய நிதியத்தை உருவாக்கியுள்ளன.

---

9. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'XcodeGhost' என்றால் என்ன?

அ) கிரிப்டோகரன்சி

ஆ) தீம்பொருள் ☑

இ) ஏவுகலம்

ஈ) COVID திரிபு

✓ "XcodeGhost" என்பது ஒரு தீம்பொருளாகும். அது, ஆப் ஸ்டோரில் பதிவே –ற்றப்பட்ட ஐபோன் மற்றும் ஐபாட் செயலிகளில் தீம்பொருளை செலுத் –துவதாக கூறப்படுகிறது. இது முதலில் 2015'இல் கண்டுபிடிக்கப்பட்டது. அண்மையில், 128 மில்லியனுக்கும் அதிகமான iOS பயனர்கள் "Xcode Ghost" தீம்பொருளால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட பயனர்களில் 55% பேர் சீனாவிலும், அவர்களுள் 18 மில்லியன் பேர் அமெரிக்காவிலும் உள்ளனர்.

---

10. நடப்பாண்டின் (2021) உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ) Everywhere for everyone

ஆ) Memorable smiles from around the world

இ) Get Together for the purpose of Humanity

ஈ) Together we are unstoppable ☑

✓ உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் (International Red Cross and Red Crescent Day) மே.8ஆம் நாளன்று அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. முதலாவது நோபல் விருதைப் பெற்றவரும் செஞ் சிலுவைச்சங்கத்தின் நிறுவனருமான ஹென்றி டுணான்ட் அவர்களின் பிறந்தநாளான இந்நாள், கடந்த 1948ஆம் ஆண்டிலிருந்து சிறப்புநாளாக அங்கீகரிக்கப்பட்டது.

✓ உலகில் யுத்தம் மற்றும் இடர்களால் பாதிப்படைவோருக்கு, மனிதாபிமா –னரீதியில் நிவாரணப்பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் செஞ்சிலு –வைச்சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கம் ஆகியன பன்னாட்டளவில் அமைக்கப்பட்டன. "Together we are unstoppable" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பேரவைத் தலைவராக மு அப்பாவு பதவியேற்றார்

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராக போட்டியின்றி ஒருமனதாகத் தேர் –ந்தெடுக்கப்பட்ட மு அப்பாவு பதவியேற்றுக்கொண்டார். துணைத்தலைவ –ராக கு பிச்சாண்டியும் பதவியேற்றுக்கொண்டார்.

பதினாறாவது பேரவையின் தலைவர்: பதினாறாவது சட்டப்பேரவையின் தலைவராக மு அப்பாவு ஆகியுள்ளார். இதற்குமுன் பேரவைத் தலைவராக ஜெ சிவசண்முகம் பிள்ளை (1952–1955), என் கோபாலமேனன் (1955–1956), யு கிருஷ்ண ராவ் (1957–61), எஸ் செல்லப்பாண்டியன் (1962–67), சி பா ஆதித்தனார் (1967–1968), கே கோவிந்தன் (1969–1971, 1973–1977), கே மதியழகன் (1971–1972), முனு ஆதி (1977–1980), க ராஜாராம் (1980–1985), பி எச் பாண்டியன் (1985–1989), தமிழ்க்குடிமகன் (1989–1991), சேடப்பட்டி முத்தையா (1991–1996), பி டி ஆர் பழனி வேல்ராஜன் (1996–2001), காளிமுத்து (2001–2006), ஆவுடையப்பன் (2006–2011), டி ஜெயக்குமார் (2011–2012), ப தனபால் (2012–2016, 2016–2021) ஆகியோ –ர் பேரவைத்தலைவர்களாகப் பதவி வகித்துள்ளனர்.

---

2. மனிதர்களின் அச்சுறுத்தலால் கேள்விக்குறியாகும் யானைகளின் உயிர்

வேட்டை, வன ஆக்கிரமிப்பு, வழித்தட ஆக்கிரமிப்பு போன்ற பல்வேறு காரணங்கள் மற்றும் மனிதர்களின் அச்சுறுத்தலால் யானைகளின் உயிருக்கு கேள்விக்குறி ஏற்பட்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இமயமலையின் பனிபடர்ந்த பகுதியைத் தவிர அனைத்துப் பகுதிகளிலும் யானைகள் வாழ்ந்துள்ளன. மனிதர்களின் அதிவேக வளர்ச்சியால் யானைகளின் வாழ்விடம் சுருங்கி இமயமலையின் அடிவாரப் பகுதியான வடகிழக்கு இந்தியா, ஒடிஸா, ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் உள்ள கிழக்கு மத்திய பகுதி, தென்னிந்தியாவில் உள்ள கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் யானைகள் வாழ்ந்து வருகின்றன.

யானைகள் பாதுகாப்பு இல்லாமல் அழிந்து வருகின்றன என்பதை உணர்ந்த மத்திய அரசு யானைகள் பாதுகாப்புத் திட்டத்தை 1992ஆம் ஆண்டு துவக்கியதுடன், இதுவரை 32'க்கும் அதிகமான யானைகள் காப்பகங்களை அறிவித்துள்ளது. இருந்தபோதும், புலிகள் பாதுகாப்புத் திட்டத்துக்கு கிடைத்த வரவேற்பு யானைகள் பாதுகாப்புத் திட்டத்துக்கு கிடைக்கவில்லை. யானைகள் பாதுகாப்புத் திட்டம் வெறும் அறிவிப்பாக மட்டுமே உள்ளது. இந்தத் திட்டம் மந்த கதியில் செயல்படுவதை உணர்ந்து, திட்டம் முழுத்திறனுடன் செயல்படவும், யானைகளுக்கு உள்ள அச்சுறுத்த –லைக் குறைக்கவும் அரசால் மகேஷ் இரங்கராஜன் தலைமையிலான வல்லுநர் குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு எலிபெண்ட் டாஸ்க் போர்ஸ் என்று அழைக்கப்பட்டது. இக்குழு 'கஜா' என்ற 187 பக்க அறிக்கையை கடந்த 2010ஆம் ஆண்டு அரசுக்கு சமர்ப்பித்தது. அதில் யானைகள் வாழ என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது குறித்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இதில், முக்கியப் பரிந்துரைகளில் ஒன்று தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் போல தேசிய யானைகள் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்பட வேண் –டும்.அவ்வாணையத்தில் ஆளுமைக்குழு உருவாக்கப்பட்டு சட்டரீதியான அங்கீகாரம் வழங்க வேண்டும் போன்றவைகள் இடம்பெற்றுள்ளன.

1987 முதல் 2007ஆம் ஆண்டு வரை இரயில் மோதி 150 யானைகள் உயிரிழந்துள்ளன. இதில் 36 சதவீத விபத்துகள் அஸ்ஸாமிலும், 26 சதவீத விபத்துகள் மேற்கு வங்க மாநிலத்திலும், 6% விபத்துகள் தமிழ்நாட்டிலும் நடைபெற்றுள்ளன.

1996 முதல் 1998ஆம் ஆண்டு வரை 3 ஆண்டுகளில் 253 யானைகள் வேட்டையாடப்பட்டுள்ளன. 2008 முதல் 2013ஆம் ஆண்டுக்கு வரை 121 யானைகள் வேட்டையாடப்பட்டன. ஐம்பது யானைகள் சாலை, இரயில் விபத்துகளால் 50 யானைகளும், மின்சாரம் பாய்ந்து 111 யானைகளும் உயரிழந்துள்ளன. தற்போது, 12 மாநிலங்களில் சுமார் 30,000 யானைக –ளே உள்ளதாக கூறப்படுகிறது. யானைகள் அழிவுக்கு முக்கிய காரணம் வாழ்விடம் சுருங்குதல், உழவுக்காக காடு திருத்துதல், வேட்டை, மோதல் தொடர்பான இழப்புகள் அதிகம். யானைகள் தங்களது தோற்றத்துக்கு ஏற்றார்போல தினசரி 150 கிலோ பசுந்தீவனகளையும், 100 லிட்டர் தண்ணீரையும் உணவாக எடுத்துக்கொள்கின்றன.

உணவுத் தேவையை பூர்த்தி செய்ய ஆண்டுதோறும் 300 முதல் 400 சதுர கிமீ தூரம் யானை பயணிக்கிறது. பருவ நிலைக்கு ஏற்ப தங்களது வாழ்விடங்களை அவ்வப்போது தேர்வுசெய்கிறது. மனிதர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக யானை வழித்தடங்களை இழந்து காலநிலைக்கு தகுந்தாற்போல இடம்பெற முடியாமல் யானைகள் பாதிக்கப்படுகின்றன. யானை வழித்தடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இதில் 25 சதவீத வழித்தடம் மட்டுமே பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகள் உள்ளன. மீதமுள்ள 75% பாதுகாப்பற்ற வனப் பகுதிகளுக்கு வெளியே உள்ளன. இதனால் யானைகளை காப்பாற்றுவதில் சிக்கல் ஏற்படுகிறது.

பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளுக்கு வெளியே உள்ள காப்புக் காடுகளும், இதர வனப்பகுதிகளும் வேகமாக அழிந்து வருவதால் யானைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. யானைகள் நீண்டகாலம் வாழ குறைந்தது 5,000 சகிமீ பரப்புகொண்ட காடுகள் அவசியம். இதில்தான் குட்டி இடக்கூடிய 500'க்கும் மேற்பட்ட யானைகள் வாழ முடியும்.

இந்தியாவில் இந்த அளவுகொண்ட காடுகள் அரிதாகி வருகின்றன. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் உள்ள மெத்தனம், வனப்பகுதிக்கு நடுவே அமைக்கப்படும் இரயில் பாதைகள், சாலைகள் மற்றும் பல்வேறு காரணங்களால் யானை–மனித மோதல் அதிகரிக்கிறது. தென்னிந்தியா –வில் வனப்பகுதியை அடுத்துள்ள கிராமங்களில் ஆண்டுதோறும் சராசரியாக 15% பயிர் சேதம் ஏற்படுகிறது. யானைகளுக்கு மனிதர்களால் ஏற்படும் அச்சுறுத்தல் தற்போது அதிகரித்து வருகிறது.

சமீபகாலமாக யானைகள் தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் என்பது தொடர்கிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு கேரளத்தில் யானை ஒன்று வெடிவைத்து தாக்கப்பட்டதில் அதன் வாயில் காயம் ஏற்பட்டு அது வலி தாங்க முடியாமல் தண்ணீரில் நின்று உயிரிழந்த சம்பவம் உலகத்தையே கண்ணீர்விட வைத்தது. நீலகிரி மாவட்டம், மசினகுடி பகுதியில் ரிசார்ட் உரிமையாளர்கள் தீப்பற்றவைத்த டயரை வீசி யானையை கொன்ற சம்பவம் இயற்கை ஆர்வலர்களை வேதனை அடையச்செய்தது.

அதேபோல ஆனைமலை புலிகள் காப்பகம் அருகே பிடிக்கப்பட்ட அரிசி இராஜா யானை மூன்று பேரைத் தாக்கி கொண்றதாக அனைவரும் கூச்சலிட்டு யானையை பிடிக்குமாறு தெரிவித்தனர். இதேபோல, உடுமலை வனப்பகுதியில் யானைகள் மீது தாக்குதல் நடத்திய விடியோ சமூக வலைதளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியது. இது தவிர வனப் பகுதிகளில் யானைகள் உயிரிழப்பது அதிகரித்து வருகிறது.

கோயம்புத்தூர் கோட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகமான எண்ணிக்கையில் யானைகள் உயிரிழந்துள்ளன. இதேபோல ஆனை மலை புலிகள் காப்பகத்தில் அதிகமான எண்ணிக்கையில் யானைகள் உயிரிழந்துள்ளன. இப்படி யானைகள் உயிரிழப்பு அதிகரித்து யானைகளி –ன் பாதுகாப்பு கேள்விக்குறியாகி வருகிறது. இதைத்தடுக்க யானைகள் பாதுகாப்பு ஆணையத்தை உருவாக்கி அந்த ஆணையத்துக்குத் தேவை

–யான அதிகாரத்தை வழங்கி யானைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் யானைகள் அழிவதைத் தடுக்கமுடியாது.

யானைகள் அழிந்தால் காடுகள் அழியும், காடுகள் அழிந்தால் மனித இனம் தண்ணீரின்றி அழிந்துவிடும். ஆகவே யானைகள் பாதுகாப்பை உறுதி செய்ய யானைகள் பாதுகாப்பு ஆணையத்துக்கு உயிர்கொடுக்க வேண்டு –ம். யானைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய யானைகள் பாதுகாப்பு ஆணையத்தை உருவாக்குவது, யானைகளின் மீது அச்சுறுத்தல் ஏற்படுத் –துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது போன்றவை இன்றி –யமையாததாக உள்ளது.

---

3. அமெரிக்க ராணுவ தலைமை தளபதியுடன் நரவணே பேச்சு

இந்திய ராணுவ தலைமைத் தளபதி M M நரவணே, அமெரிக்க ராணுவ தலைமைத் தளபதி ஜேம்ஸ் சி மெக்கான்விலேவுடன் தொலைபேசியில் உரையாடினார். இருவரிடையே நிகழ்ந்த உரையாடல் குறித்து அதிகாரிக –ள் கூறுகையில் பிராந்திய பாதுகாப்பு விவகாரத்தில் இந்தியா–அமெரிக்கா இடையேயான ராணுவ ஒத்துழைப்பை சில குறிப்பிட்ட பகுதிகளில் மேலும் விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து நரவணே–மெக்கான்விலே ஆலோசித்தனர். அத்துடன் கரோனா தொற்று சூழலை திறம்பட எதிர்கொ –ள்வது தொடர்பாகவும் அவர்கள் விவாதித்தனர் என்றனர்.

இருவரது உரையாடல் தொடர்பாக இந்திய ராணுவமும் சுட்டுரையில் பதிவிட்டிருந்தது. கடந்த சில ஆண்டுகளாக ராணுவ ரீதியிலாக இந்தியா–அமெரிக்கா இடையேயான ஒத்துழைப்பு மேம்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு அக்டோபரில், ராணுவ உயர் தொழில்நுட்பம், தளவாடங்கள், புவிசார் வரைபடங்கள் ஆகியவற்றை இந்தியா – அமெரிக்கா இடையே பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தம் இருநாடுகளிடையே கையெழுத்தான –து. அதற்குமுன் 2018'இல், அமெரிக்காவின் இராணுவ உயர்தொழில்நுட்ப –ங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கும், மென்பொருள் உள்ளிட்டவை தொடர்பான தரவுகளை பரஸ்பரம் பகிர்ந்துகொள்வதற்கும் வழிவகுக்கும் ஒப்பந்தம் கையெழுத்தானது. கடந்த 2016'இல் இந்தியாவை தனது பிரதா –ன பாதுகாப்புத் துறை கூட்டாளி என்று அமெரிக்கா அறிவித்தது. அதே ஆண்டில், இரு நாட்டு ராணுவ தளங்களையும் இருநாடுகளும் பரஸ்பரம் பயன்படுத்திக் கொள்வதற்கான ஒப்பந்தம் இந்தியா–அமெரிக்கா இடையே கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது.

---

4. ₹18,100 கோடியில் ஏசிசி பேட்டரி உற்பத்தி: பிஎல்ஐ திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

ஏசிசி வகை பேட்டரி உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, ₹18,100 கோடி மதிப்பிலான உற்பத்திசார்ந்த ஊக்குவிப்பு திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தில்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு, இதுகுறித்து மத்திய தகவல் – ஒலிபரப்புத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஏசிசி வகை பேட்டரி (அட்வான்ஸ்டு கெமிஸ்ட்ரி செல்) என்பது அதிநவீன வகை பேட்டரியாகும். இதில், மின்சக்தியை ரசாயன ஆற்றலாக மாற்றி சேமித்துவைத்து பின் மீண்டும் மின்சக்தியாக மாற்றிக் கொள்ளமுடியும். இந்த வகை பேட்டரிகளின் தேவையை தற்சமயம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தே பூர்த்தி செய்து வருகிறோம். எனவே, உள்நாட்டிலேயே இந்த வகை மின்கல உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, ஏசிசி வகை பேட்டரி உற்பத்தியை ஊக்குவிக்க ₹18,100 கோடி மதிப்பிலான உற்பத்திசார் ஊக்குவிப்புத்திட்டத்துக்கு மத்திய அமைச்சர –வை ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ₹45,000 கோடி முதலீடு ஈர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 50 கிகா வாட் மின்சாரத்தை சேமித்து வைக்கக் கூடிய அளவில் பேட்டரிகளை தயாரிக்க வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் அதிக அளவில் உற்பத்தி செய்து, அதிக அளவில் விற்பனை செய்யும் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்படும்.

மின்சார வாகனங்கள், சூரியமின்சக்தி உற்பத்தி நிலையங்கள், மின் பகிர்மான கட்டமைப்புகள் ஆகியவற்றில் ஏசிசி பேட்டரிகள் அதிகம் தேவைப்படும். மின்சார வாகனங்கள் பயன்பாட்டால் சுற்றுச்சூழல் மாசடைவது குறையும். மேலும், எரிபொருள் தேவையும் குறையும். இதனால் எரிபொருள் இறக்குமதிக்கு செலவிடும் தொகையில் ரூ.2.5 லட்சம் கோடி வரை மிச்சமாகும். புதிதாக வேலைவாய்ப்புகளும் உருவாகும். ஏசிசி வகை பேட்டரிகள் எளிதில் கிடைக்குமானால், மின்சார வாகனங்களின் உற்பத்தியும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார் அவர்.

ரோப்கார் திட்டத்துக்கு நிலம்: உத்தரகண்ட் மாநிலத்தில் தலைநகர் டேராடூனுக்கும், சுற்றுலாத்தலமான முசௌரிக்கும் இடையே போக்குவரத் –து நெரிசலைக்குறைப்பதற்காக ரோப்கார் வழித்தடம் அமைக்கப்படவுள்ள –து. இந்தத் திட்டத்துக்காக, இந்திய–திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படைக்கு சொந்தமான 1,500 சதுர மீட்டர் நிலத்தை உத்தரகண்ட் அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

டேராடூன்–முசௌரி இடையே 35 கி.மீ. தொலைவுக்கு ₹285 கோடியில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. பட்டய கணக்குத் துறையில்

இந்தியா–கத்தார் இடையே ஒப்பந்தம்: இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்துக்கும், கத்தார நிதி ஆணையத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஒப்பந்தம் மூலமாக, இந்திய பட்டய கணக்காளர்கள், கத்தாரில் நிதிச் சேவைகள், வரி விதிப்பு, ஆலோசனை, கணக்குத் தணிக்கை ஆகிய பிரிவுகளில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

---

5. விரிவுபடுத்தப்படுகிறது சூயஸ் கால்வாய்: எகிப்து அறிவிப்பு

எகிப்து நாட்டின் சூயஸ் கால்வாயில் பிரமாண்ட சரக்கு கப்பல் ஒன்று அண்மையில் தரைதட்டி கப்பல் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தக்கால்வையை விரிவுபடுத்த அந்நாடு திட்டமிட்டுள்ளது.

எகிப்து நாட்டில் உள்ள சூயஸ் கால்வாய் ஆசியாவின் மத்திய தரைக்கடல் பகுதியையும், ஐரோப்பாவின் செங்கடல் பகுதியையும் இணைக்கும் முக்கிய நீர்வழித்தடமாகும். இந்தியப்பெருங்கடல் பகுதியில் பயணிக்கும் நூற்றுக்கணக்கான கப்பல்கள் இந்தக் கால்வாய் வழியாகத்தான் செங்கடல் பகுதிக்கு பயணித்து வருகின்றன. உலக வர்த்தகத்தில் 10% இந்தக் கால்வாய் வழியாக நடப்பதாகவும், கடந்த ஆண்டில் மட்டும் இந்தக் கால்வாய் வழியாக 19,000 கப்பல்கள் கடந்துள்ளதாகவும் அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில், தைவான் நாட்டைச் சேர்ந்த 'எவர் கிரீன் மரைன்' என்ற நிறுவனம் இயக்கி வரும் ஜப்பான் நாட்டுக்குச் சொந்தமான 'எவர் கிவன்' என்ற பிரமாண்ட சரக்கு கப்பல் அண்மையில் சூயஸ் கால்வாயில் தரைதட்டி குறுக்காக சிக்கிக்கொண்டது.

400 மீ நீளமும் 59 மீ அகலமும் கொண்ட இந்தக் கப்பல், குறுகிய சூயஸ் கால்வாயில் குறுக்காக சிக்கிக்கொண்டதால், அந்த வழியாக வேறு கப்பல்கள் செல்ல முடியாத சூழல் உருவானது. இதனால் பல லட்சம் மதிப்பிலான சரக்குகள் தேக்கமடைந்தன. 6 நாள்கள் தீவிர முயற்சிக்குப் பிறகே அந்தக் கப்பல் மீட்கப்பட்டு, கப்பல் போக்குவரத்து சீரானது.

இந்தச் சூழலில், சூயஸ் கால்வையை விரிவுபடுத்த எகிப்து அரசு முடிவு செய்துள்ளது. கால்வாயின் தென்கோடியில் சீனாய் தீபகற்பம் பகுதியில் கிழக்கு நோக்கி 40 மீ அளவுக்கு விரிவுபடுத்தவும், கால்வாயின் ஆழத்தை இப்போது உள்ள 66 அடி அன்ற அளவிலிருந்து 72 அடியாக ஆழப்படுத்தவு –ம் திட்டமிடப்பட்டுள்ளது. அதோடு, கடந்த 2015ஆம் ஆண்டு இந்தக்கால்வா –யில் திறக்கப்பட்ட இரண்டாவது வழித்தடமும் 10 கிமீ நீளத்துக்கு விரிவுப –டுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்மூலம், இவ்விரு வழித்தட கால்வாய் 82 கிமீ நீளம்கொண்டதாக விரிவடையும் என்பதோடு, மேலும் அதிக கப்பல்க –ள் எளிதாக கால்வாயை கடக்க வழி ஏற்படும்.

---

6. எந்தவிதமான அறிகுறியும் இல்லாத லேசான தொற்றை குணப்படுத்தும் 'கபசுரக் குடிநீர்' – ஆராய்ச்சியில் உறுதியானதால் ஆயுஷ் அமைச்சகம் பரிந்துரை

அறிகுறி இல்லாத, லேசான, மிதமானகரோனா தொற்றை கபசுரக் குடிநீர் குணப்படுத்துவது ஆராய்ச்சியில் உறுதியானதால், அதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அனைத்து மாநில அரசுகளுக்கு மத்திய ஆயுஷ் அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின்கீழ் தாம்பரத்தில் செயல்படும் தேசிய சித்த நிறுவனமருத்துவமனையில் 100 படுக்கைகளுடன் சிகிச்சை மையம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், தருமபுரி, தேனி, நாமக்கல், கரூர், திருவண்ணாமலை, அரியலூர், மதுரை, தென்காசி, திண்டுக்கல், ராணிப்பேட்டை, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய 12 மாவட்டங்களில் தமிழ்நாடு அரசு சித்த மருத்துவ மையங்களை அமைக்க உள்ளது.

இந்நிலையில், அறிகுறி இல்லாத, லேசான மற்றும் மிதமான தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் கபசுர குடிநீர்மூலம் குணமடைவது, மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம்நடத்திய ஆராய்ச்சியில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதேபோல, ஆயுஷ்–64 என்ற ஆயுர்வேத மருந்து தொற்றைக் குணப்படுத் –துவதும், மத்திய ஆயுர்வேத மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தின் ஆராய்ச்சி –யில் தெரியவந்துள்ளது. இந்த இரு மருந்துகள் குறித்து விழிப்புணர்வை

ஏற்படுத்தவும், தேவையானவர்களுக்கு கொடுக்கவும் மாநில அரசுகளுக்கு, மத்திய ஆயுஷ் அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

---

7. தமிழ்நாடு உளவுத்துறையில் – DIGஆக ஆசியம்மாள் நியமனம்: முதன்முறையாக பெண் அதிகாரி பொறுப்பேற்பு

தமிழ்நாடு உளவுத்துறை ADGPஆக டேவிட்சன் தேவாசீர்வாதம், DIGஆக ஆசியம்மாளும் நியமிக்கப்பட்டுள்ளனர். உளவுத்துறை DIG அந்தஸ்தில் பெண் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

---

1. மனநலத்திற்காக 'தோஸ்ட் பார் லைப்' திறன்பேசி செயலியை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) AICTE

ஆ) NTA

இ) CBSE ☑

ஈ) UGC

✓ மத்திய இடைநிலைக்கல்வி வாரியம் (CBSE) சமீபத்தில் மாணவர்களின் மனோ–சமூக நலனுக்கான புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப்புதிய செயலி CBSE–உடன் இணைந்த பள்ளிகளைச் சேர்ந்த 9–12 வகுப்பு மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உதவும்.

✓ பயிற்சிபெற்ற ஆலோசகர்களால் வாரத்திற்கு மும்முறை நேரடி ஆலோச–னை அமர்வுகள் இலவசமாக நடத்தப்படும். முன்னர், கட்டணமில்லா எண்மூலம் ஆலோசனை வழங்கும் நடைமுறை இருந்தது.

2.கீழ்காணும் எவ்விரு நாடுகளால் கூட்டாக இணைந்து '3ஆவது ஆர்க்டிக் அறிவியல் அமைச்சர்கள் கூட்டம்' ஏற்பாடு செய்யப்பட்டது?

அ) ஜெர்மனி மற்றும் பிரான்ஸ்

ஆ) ஐஸ்லாந்து மற்றும் ஜப்பான் ☑

இ) இத்தாலி மற்றும் பிரான்ஸ்

ஈ) ஜப்பான் மற்றும் இந்தியா

✓ ஆர்க்டிக் பகுதியில் ஆராய்ச்சி & ஒத்துழைப்பு குறித்து விவாதிப்பதற்கான தளமான மூன்றாவது ஆர்க்டிக் அறிவியல் அமைச்சர்கள் கூட்டத்தில் (2021 மே 8–9) இந்தியா பங்கேற்றது. முதல் இரண்டு கூட்டங்கள், முறையே அமெரிக்காவில் 2016'இல் மற்றும் ஜெர்மனியில் 2018'இல் நடைபெற்றது. ஐஸ்லாந்து மற்றும் ஜப்பான் கூட்டாக ஏற்பாடு செய்துள்ள 3ஆவது ஆர்க்டிக் அறிவியல் அமைச்சர்கள் கூட்டம், ஆசியாவில் நடக்கும் முதல் அமைச்சர்கள் கூட்டமாகும். ஆர்க்டிக் கவுன்சிலில் இந்தியா மற்ற பன்னிரண்டு நாடுகளுடன் 'பார்வையாளர்' அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

---

3. அலெக்ஸாண்டர் ஸ்வெரெவ் மற்றும் ஆர்னா சபாலெங்கா ஆகியோர் பின்வரும் எந்த 'மாஸ்டர்ஸ் 100 போட்டி'யில் வெற்றி வாகை சூடியுள்ளனர்?

அ) மியாமி ஓபன்

ஆ) மாட்ரிட் ஓபன் ☑

இ) இத்தாலியன் ஓபன்

ஈ) ஷாங்காய் மாஸ்டர்ஸ்

✓ ஜெர்மன் டென்னிஸ் வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரெவ் இத்தாலிய மேட்டியோ பெரெட்டினியை தோற்கடித்து தனது நான்காவது மாஸ்டர்ஸ் 1000 கிரீடம் மற்றும் இரண்டாவது மாட்ரிட் ஓபன் பட்டத்தை பெற்றார். இந்த வீரர் ஜூலை 2017 முதல் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளார், மேலும் அவர் கடந்த ஆண்டு US ஓபன் ரன்னர்–அப் ஆகவும் இருந்தார்.

✓ முதுவா மாட்ரிட் ஓபன் போட்டியில் பெலாரஷிய டென்னிஸ் வீரர் ஆர்னா சபாலெங்கா தனது 10ஆவது பட்டத்தை வென்றுள்ளார். அவர் உலகின் நம்பர் 1 வீராங்கனையான ஆஷ்லீ பார்ட்டியை தோற்கடித்தார்.

---

4. நடப்பாண்டில் (2021) வரும் தேசிய தொழில்நுட்ப நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Science and Technology for a Sustainable Future ☑

ஆ) Restart and Recycle

இ) Atmanirbhar Vigyan

ஈ) Science and Technology for Atmanirbhar India

✓ நாடு மேற்கொண்ட தொழில்நுட்ப முன்னேற்றங்களை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மே.11 அன்று தேசிய தொழில்நுட்ப நாள் கொண்டாடப்படுகிறது. "Science and Technology for a Sustainable Future" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

✓ இந்த நாள், முதன்முதலில் 1999 மே.11 அன்று அனுசரிக்கப்பட்டது. அதே தேதியில் 1998'இல், இராஜஸ்தானில் உள்ள இந்திய இராணுவத்தின் பொக்ரான் சோதனைத்தளத்தில் இந்தியா 3 அணு சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியது. 1998 மே.11 அன்று இந்தியா தனது முதல் உள்நாட்டு வானூர்தியான ஹன்சா–3 மற்றும் திரிசூல் ஆகியவற்றை பரிசோதனை செய்தது.

---

5. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய இனமான *Ampelorhiza heteroxylon*, கீழ்காணும் எந்த வகையைச் சேர்ந்ததாகும்?

அ) பூச்சி

ஆ) தாவரம் ☑

இ) நீர்வாழ் விலங்கு

ஈ) நிலவாழ் விலங்கு

✓ பனாமாவில் 18.5 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதைபடிவத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கொடியோடும் தாவரத்தின் பழமையான நம்பகமான இனம் இது என்று கூறப்படுகிறது. பூச்சக்காய் குடும்பத்தைச் சார்ந்த 'லியானா' என அழைக்கப்படும் ஏறும் கொடியைச் சேர்ந்த இப்புதிய இனத்திற்கு '*Ampelorhiza heteroxylon*' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு, ஏறும் தாவரங்களின் பரிணாம வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

6. இந்தியாவில் இயக்கப்படும் ஒரே விமானந்தாங்கிக்கப்பல் எது?

அ) INS விராட்

ஆ) INS விக்ரமாதித்யா ☑

இ) INS விக்ராந்த்

ஈ) INS விஷால்

✓ இந்தியாவின் ஒரே விமானந்தாங்கிக்கப்பலான INS விக்ரமாதித்யா என்பது மாற்றியமைக்கப்பட்ட கியேவ் வகுப்பைச்சார்ந்த 44,500 டன் எடைகொண்ட விமானந்தாங்கிக்கப்பலாகும். இந்த விமானந்தாங்கிக் கப்பல் சமீபத்தில் தனது சொந்த துறைமுகமான கர்நாடகாவில் உள்ள கார்வாரில் ஒரு சிறிய தீவிபத்துக்கு ஆளானது.

✓ இந்த விமானந்தாங்கிக்கப்பலை இந்தியா ரஷ்யாவிலிருந்து வாங்கியது. 7 ஆண்டுகளுக்கு முன்பு கடற்படையில் அது இணைக்கப்பட்டது. MiG–29K ஏவுகணைகளை ஏவ இந்த விமானந்தாங்கிக்கப்பல் பயன்படுத்தப் –படுகிறது.

---

7. லாங் மார்ச் 5B'இன் மீதங்கள் இந்தியப்பெருங்கடலில் வீழ்ந்தன. அது எந்த நாட்டினுடைய ஏவுகலமாகும்?

அ) ரஷியா

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இ) சீனா ☑

ஈ) இந்தியா

✓ சீனாவின் மிகப்பெரிய ஏவுகணையின் மீதங்கள் இந்தியப்பெருங்கடலில் வீழ்ந்தன அதன் பெரும்பாலான கூறுகள் பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்தபோதே எரிந்தன. லாங் மார்ச் 5B ஏவுகணை, சீனாவின் அடுத்த விண்வெளி நிலையமான தியாங்காங்கின் முக்கிய தொகுதியை ஏப்ரல் மாதம் ஏவியது. இவை பூமியில் எங்கு விழும் என்பது பற்றிய யூகங்கள் நிலவி வந்தன. கடந்த ஆண்டு, முதல் லாங் மார்ச் 5B'இன் மீதங்கள் ஐவரி கோஸ்டில் விழுந்தன.

8."மோதல் மற்றும் பாதுகாப்பு" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ) IUCN ☑

ஆ) UNFCCC

இ) IMF

ஈ) WHO

✓ 'மோதல் மற்றும் பாதுகாப்பு' என்பது இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN), வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையாகும். இந்த அறிக்கையில், இயற்கைக்கும் மோதலுக்கும் இடையிலான சிக்கலான உறவுகளை ஆராய்ந்து அமைதிக் கட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்ட கொள்கைகளை IUCN பரிந்துரைக்கிறது.

✓ IUCN என்பது இயற்கை மற்றும் வளங்களின் பாதுகாப்பு மற்றும் நிலைத் தன்மைக்காக செயல்படுகிற ஒரு பன்னாட்டு அமைப்பாகும். இதன் தலைமையகம் சுவிச்சர்லாந்தின் கிளாண்டில் அமைந்துள்ளது.

---

9. உலக செவிலியர் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) மே 10

ஆ) மே 11

இ) மே 12 ☑

ஈ) மே 13

✓ உலக செவிலியர் நாளானது ஒவ்வோர் ஆண்டும் மே.12 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. கடந்த 1820ஆம் ஆண்டு இதே நாளில், பிரபல சமூக சீர்திருத்தவாதியும் செவிலியருமான புளோரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்தார். ஓர் ஆங்கில புள்ளிவிவர நிபுணரும் சமூக சீர்திருத்தவாதியும் ஆன அவர், நவீன செவிலியத்தின் முக்கிய தூண்களை நிறுவினார்.

✓ உலக செவிலியர்கள் கவுன்சிலானது உலக செவிலியர் நாளை அனுசரிக்கிறது. 130'க்கும் மேற்பட்ட தேசிய செவிலியர் சங்கங்களின் கூட்டமைப்புதான் அந்தக் கவுன்சில்.

---

10. குளோபல் பிரைம் குடியிருப்பு குறியீட்டில் 32ஆவது இடத்தை வென்ற இந்திய நகரம் எது?

அ) மும்பை

ஆ) புது தில்லி ☑

இ) ஹைதராபாத்

ஈ) பெங்களூரு

✓ இலண்டனைச் சார்ந்த சொத்து ஆலோசக நிறுவனமான நைட் பிராங்க் குளோபல் பிரைம் குடியிருப்பு குறியீட்டை வெளியிட்டுள்ளது. இந்தக் குறியீட்டின்படி, புது தில்லி மற்றும் மும்பை ஆகிய நகரங்கள் முறையே 32 மற்றும் 36ஆவது இடங்களில் உள்ளன. பிரைம் குளோபல் சிட்டிஸ் இன்டெக்ஸ் என்பது ஒரு மதிப்பீட்டு அடிப்படையிலான குறியீடாகும்; இது 45'க்கும் மேற்பட்ட நகரங்களை உள்நாட்டு பணத்தின் அடிப்படையில் பிரதான குடியிருப்பு விலைகளின் இயக்கத்தைக் கண்காணித்தது.

✓ உலகளவில், சீன நகரமான ஷென்சென், 2020 முதல் காலாண்டு முதல் 2021 முதல் காலாண்டு வரையிலான காலகட்டத்தில் 18.9% வருடாந்திர மாற்றத்துடன் முதலிடத்தைப் பிடித்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மாநிலங்களுக்கு ஆக்சிஜனை பகிர்ந்தளிக்க பன்னிரண்டு பேர் குழு: உச்சநீதிமன்றம் நியமனம்

மாநிலங்களுக்கு ஆக்சிஜனை பகிர்ந்தளிக்க பன்னிரண்டு பேர் குழுவை உச்சநீதிமன்றம் நியமித்துள்ளது. நாடு முழுவதும் நாள்தோறும் 4 இலட்சம் பேருக்கு கரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு வருகிறது. இந்த இக்கட்டான நேரத்தில் தில்லி, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் ஆக்சிஜன் பற்றாக்குறையால் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இதுதொடர்பான வழக்கை உச்ச நீதிமன்றம் விசாரித்து வருகிறது. இவ்வழக்கு நீதிபதிகள் சந்திரசூட், எம் ஆர் ஷா அமர்வு முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு: மாநிலங்களுக்கு ஆக்சிஜனை பகிர்ந்தளிப்பது தொடர்பாக 12 பேர் குழுவை நியமிக்கிறோம். மேற்கு வங்க பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் மருத்துவர் பாபாதோஷ் பிஸ்வாஸ், டெல்லி சர் கங்காராம் மருத்துவமனை தலைவர் தேவேந்தர் சிங் ராணா, பெங்களூரு நாராயணா ஹெல்த்கேர் தலைவர் மருத்துவர் தேவி பிரசாத் ஷெட்டி, தமிழ்நாட்டின் வேலூரில் செயல்படும் கிறிஸ்டியன் மருத்துவ கல்லூரி பேராசிரியர் ககன்தீப், வேலூர் மருத்துவ கல்லூரி இயக்குநர் பீட்டர், குருகிராம் மேதாந்தா மருத்துவமனை தலைவர் நரேஷ், போர்டிஸ் மருத்துவமனை இயக்குநர் இராகுல் பண்டிட், தில்லி சர் கங்காராம் மருத்துவமனை கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை பிரிவு தலைவர் சுமித்ரா ராவத், தில்லி ஐஎல்பிஎஸ் மூத்த பேராசிரியர் சிவகுமார், மும்பை பிரிச் கேண்டி, இந்துஜா மருத்துவமனை இதயநோய் மருத்துவர் ஜாரிர் எப் உத்வாடியா மற்றும் மத்திய சுகாதாரத் துறை செயலாளர், கேபினட் செயலாளர் ஆகியோர் குழுவில் இடம்பெறுகின்றனர். அனைத்து மாநிலங்களின் ஆக்சிஜன் தேவையை நிபுணர் குழு ஆய்வு செய்யும். அதன் அடிப்படையில் அனைத்து மாநிலங்களுக்கும் சரிசமமாக ஆக்சிஜன் பகிர்ந்து அளிக்கப்படும். தற்போதைய ஆக்சிஜன் இருப்பு, விநியோகம், எதிர்கால தேவை குறித்து நிபுணர் குழு பரிந்துரைகளை சமர்ப்பிக்கும். ஆக்சிஜன் தேவை, விநியோகம் தொடர்பாக அந்தந்த மாநிலங்களில் துணைக் குழுக்கள் அளிக்கும் பரிந்துரைகளை 12 பேர் குழு பரிசீலிக்கும். ஆக்சிஜன் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு முறையாக சென்று சேர்ந்ததா என்பதை நிபுணர் குழு உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர். வழக்கின் அடுத்த விசாரணை 17–ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது. குழுவில் தமிழகம் முதல் டெல்லி வரை பல மாநில மூத்த மருத்துவர்கள் உள்ளனர். இடம்பெற்றுள்ளனர். குழுவில் 10 பேர் மருத்துவர்கள். 2 பேர் அரசு அதிகாரிகள்.

---

2. கோவிஷீல்ட் 2–ஆவது தவணைக்கான இடைவெளி 12 முதல் 16 வாரங்களாக அதிகரிப்பு: கா'ப்பிணிகளும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள அனுமதி

கோவிஷீல்ட் தடுப்பூசி இரண்டாவது தவணைக்கான இடைவெளியை 12 முதல் 16 வாரங்களாக அதிகரித்துக்கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. கா'ப்பிணி பெண்களும் பாலூட்டும் தாய்மா'களும் கரோனா தடுப்பூசியை செலுத்திக் கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய சுகாதாரத் துறை அமைச்சக வழிகாட்டுதலின்படி, தடுப்பூசி இரண்டு தவணைகளுக்கான இடைவெளி 4 முதல் 8 வாரங்களாக நி'ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், கரோனா பாதிப்பிலிருந்து மீண்டவா'கள், 4 முதல் 8 வாரங்களுக்குப் பிறகே தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும். கா'ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மா'கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளக் கூடாது என்று மத்திய அரசின் இப்போதைய வழிகாட்டுதல் தெரிவிக்கிறது.

இந்த நிலையில், 'கோவிஷீல்ட் தடுப்பூசி இரண்டாம் தவணைக்கான இடைவெளியை 12 முதல் 16 வாரங்களாக அதிகரிக்கலாம். கா'ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மா'களும் எந்தவொரு கரோனா தடுப்பூசியையும் செலுத்திக் கொள்ளலாம். சா'ஸ் அல்லது கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவா'கள் கரோனா தொற்றிலிருந்து குணமடைந்ததிலிருந்து 6 மாதங்களுக்கு தடுப்பூசி செலுத்திக் கொள்வதை தவிர்'க்க வேண்டும்' என்று என்டிஏஜிஐ பரிந்துரை செய்தது. கோவேக்ஸின் தடுப்பூசி இரண்டாம் தவணைக்கான இடைவெளியில் எந்த மாற்றத்தையும் என்டிஏஜிஐ பரிந்துரைக்கவில்லை. 'பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளிலிருந்து கிடைத்திருக்கும் நேரடி ஆதாரங்களின் அடிப்படையில், கோவிஷீல்ட் தடுப்பூசி இரண்டாம் தவணைக்கான இடைவெளியை 12 முதல் 16 வாரங்களாக அதிகரிக்க கரோனா பணிக் குழு ஒப்புக்கொண்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற என்டிஏஜிஐ கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது' என்று இதுகுறித்து மத்திய அரசு அதிகாரிகள் கூறினா'.

என்டிஏஜிஐ சா'பில் சமா'ப்பிக்கப்பட்ட இந்தப் பரிந்துரையை தேசிய கரோனா தடுப்பூசி செலுத்துவதற்கான நிபுணா' குழு (என்ஐஜிவிஏசி) ஏற்று, அனுமதி அளித்துள்ளது. இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், 'என்டிஏஜிஐ பரிந்துரையை நீதி ஆயோக் உறுப்பினா' (சுகாதாரம்) மருத்துவா' வி.கே.பால் தலைமையிலான தேசிய கரோனா தடுப்பூசி செலுத்துவதற்கான நிபுணா' குழு புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் ஏற்றுக்கொண்டது. அதன் மூலம் கோவிஷீல்ட் தடுப்பூசி இரண்டாம் தவணை செலுத்துவதற்கான இடைவெளி 6 முதல் 8 வாரங்கள் என்பது 12 முதல் 16 வாரங்களாக நீட்டிக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது' என்று தெரிவித்துள்ளது.

---

3. தள்ளாடும் புதுவை... | அரசின் ஸ்திரத்தன்மை குறித்த தலையங்கம்

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தோ'தலில் தமிழகத்தைப் போலவே புதுச்சேரியிலும் ஆட்சி மாற்றத்திற்கு மக்கள் வாக்களித்தும்கூட, இன்னும் அங்கு புதிய அரசு செயல்பட தொடங்கவில்லை என்பது வருத்தமளிக்கிறது. இந்திய யூனியனில் இணைந்த ஒன்றியப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டு எட்வா'ட் குபோ' தலைமையில் 1963 ஜூலை 1–ஆம் தேதி புதுச்சேரியில் அரசு அமைந்தது முதலே தொடா'ந்து பலமுறை ஸ்திரத்தன்மை இல்லாமல் இருந்திருப்பதால் இப்போதைய திரிசங்கு நிலை ஒன்றும் புதிதல்ல. 30 உறுப்பினா'களைக் கொண்ட புதுச்சேரி சட்டப்பேரவையில், தேசிய ஜனநாயகக் கூட்டணி 16 இடங்களில் வென்று தனிப்பெரும்பான்மை பெற்றிருக்கிறது. அகில இந்திய என்.ஆ'. காங்கிரஸ் 10 இடங்களிலும், பாஜக ஆறு இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கின்றன. அதன் அடிப்படையில்தான் அகில இந்திய என்.ஆ'. காங்கிரஸ் தலைவா'

என். ரங்கசாமி நான்காவது முறையாக கடந்த வெள்ளிக்கிழமை தான் மட்டும் முதல்வராகப் பதவி ஏற்றார்.

மதச்சார்பற்ற கூட்டணி சார்பில் திமுக ஆறு இடங்களிலும், காங்கிரஸ் இரண்டு இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கின்றன. ஏனைய ஆறு இடங்களில் சுயேச்சைகள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். நியாயமாகப் பார்த்தால் அங்கு எந்தவிதக் குழப்பத்துக்கும் முகாந்திரம் இல்லை. கடந்த முறையும் காங்கிரஸ் தலைமையில் நிலையான ஆட்சிதான் அமைந்தது. காங்கிரஸும், திமுகவும் அவையில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தும்கூட, அப்போதைய துணை நிலை ஆளுநர் கிரண் பேடிக்கும், அன்றைய முதல்வர் வே. நாராயணசாமிக்கும் இடையிலான பனிப்போர் நிர்வாகத்தை ஏறத்தாழ முடக்கிப் போட்டிருந்தது. கடந்த 2016-இல் தொடங்கிய மோதல், வே. நாராயணசாமி அரசு கலைக்கப்படும் வரை தொடர்ந்தது. அதன் விளைவுதானோ என்னவோ கடந்த முறை 15 இடங்களைக் கைப்பற்றிய காங்கிரஸ் கட்சி, இந்த முறை வெறும் இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது.

மத்திய அரசுடனும், துணை நிலை ஆளுநருடனும் இணக்கமான உறவு இல்லாததால் முந்தைய காங்கிரஸ் ஆட்சி சரியாக இயங்க முடியவில்லை என்பதால்தான் இந்த முறை பாஜக-வுடன் கூட்டணி அமைத்திருந்த என்.ஆர். காங்கிரஸுக்கு மக்கள் நம்பிக்கையுடன் வாக்களித்தனர். தேர்தலின்போது இணைந்து பணியாற்றிய என்.ஆர். காங்கிரஸும், பாஜக-வும் பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சி அமைத்த வேளையில் இரு கட்சிகளுக்கிடையே கருத்தொற்றுமை இல்லாமல் இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. இதுவரை இல்லாத புதிய வழிமுறையாக புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் தங்களுக்கு துணை முதல்வர் பதவி வழங்க வேண்டும் என்கிற பாஜக-வின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முதல்வர் ரங்கசாமி தயங்குவதாகத் தெரிகிறது. இந்த கருத்து வேறுபாடு காரணமாகத்தான், முதல்வரின் பதவிப் பிரமாணம் முதலில் தள்ளி வைக்கப்பட்டது.

இதற்கிடையில், கொவைட் 19 கொள்ளை நோயால் பாதிக்கப்பட்ட முதல்வர் என். ரங்கசாமி, சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருடன் கலந்தாலோசிக்காமல் பாஜகவைச் சேர்ந்த மூன்று பேரை நியமன எம்எல்ஏ-க்களாக துணை நிலை ஆளுநர் நியமித்திருக்கிறார். பாஜக-வின் தன்னிச்சையான அந்த முடிவு, கூட்டணிக் கட்சிகளான என்.ஆர். காங்கிரஸையும் அதிமுக-வையும் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. ஏற்கெனவே ஆறு இடங்களைப் பெற்றிருக்கும் பாஜக-வின் சட்டப்பேரவை உறுப்பினர் பலம் மூன்று நியமன உறுப்பினர்களையும் சேர்த்தால் ஒன்பதாக அதிகரிக்கிறது. ஆறு சுயேச்சைகளுடன் பாஜக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும், அவர்களில் மூன்று பேர் ஏற்கெனவே பாஜக-வுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் கூறப்படும் நிலையில், பாஜக-வின் பலம் 15-ஆக அதிகரித்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. அப்படிப்பட்ட சூழலில் பாஜக-வுக்கு துணை முதல்வர் பதவியை வழங்க வேண்டிய நிர்பந்தம் முதல்வர் ரங்கசாமிக்கு ஏற்படக்கூடும்.

15 உறுப்பினர்களுடன் முதல்வர் என். ரங்கசாமியின் தலைமையிலான அமைச்சரவையில் பாஜக தொடருமா? அல்லது தனது தலைமையில் ஆட்சி அமைக்கக் கோருமா என்கிற ஐயப்பாடு பலமாக எழுந்திருக்கிறது. வாளாவிருந்தால் என்.ஆர். காங்கிரஸ், திமுக அல்லது காங்கிரஸ் உறுப்பினர்களையேகூட தன் பக்கம் இழுத்து தனிப்பெரும்பான்மையுடன் பாஜக புதுச்சேரியில் ஆட்சி அமைக்கக் கூடும் என்கிற அச்ச உணர்வு முதல்வர் ரங்கசாமிக்கு மட்டுமல்லாமல், திமுக-வுக்கும், காங்கிரஸுக்கும்கூட எழுந்திருக்கிறது. முதல்வர் என். ரங்கசாமி தலைமையில் கூட்டணி ஆட்சி தொடருமா அல்லது கட்சித் தாவலை ஊக்குவித்து பாஜக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்குமா என்கிற கேள்வி எழுந்திருக்கிறது.

இந்தியாவின் ஏனைய பகுதிகளைப் போலவே புதுச்சேரியிலும் கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றுப் பரவல் கவலை அளிக்கும் நிலையை எட்டியிருக்கிறது. முதல்வராக என். ரங்கசாமி பதவி ஏற்றுக்கொண்டுவிட்ட நிலையில், துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜனும் செயல்படாமல், அமைச்சரவையை அமையாததால் அரசும் செயல்படாத நிலையில் தவிக்கிறது புதுச்சேரி. மருத்துவமனையில் இருக்கும் முதல்வர் ரங்கசாமியுடன் திமுக-வும் காங்கிரஸும் ரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுவது உண்மையாகக்கூட இருக்கலாம். மணிப்பூர், மத்திய பிரதேசம், கோவா வரிசையில் புதுச்சேரியும் இணைந்தால் ஆச்சரியப்பட வேண்டாம். கொள்ளை நோய்த்தொற்றை எதிர்கொள்ள வேண்டிய வேளையில், அரசியல் கட்சியினர் பதவிக்காக பேரம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தள்ளாடத்தானே செய்யும் புதுச்சேரி...

---

4. 5 மாநில பேரவைத் தேர்தல்கள்: குறைபாடுகளை அறிய குழு அமைக்கிறது தேர்தல் ஆணையம்

சமீபத்தில் நடைபெற்ற 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலின்போது இருந்த குறைபாடுகளை அறிய தேர்தல் ஆணையம் குழு ஒன்றை அமைக்கிறது. தமிழகம், மேற்கு வங்கம், அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் பேரவைத் தேர்தல் நடைபெற்ற நிலையில், இந்த நடவடிக்கையை தேர்தல் ஆணையம் மேற்கொள்கிறது. இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

5 மாநில பேரவைத் தேர்தல்களின்போது தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் இருந்த குறைகள், அந்தத் தேர்தலில் கிடைத்த அனுபவம் ஆகியவை குறித்து ஆராய குழு அமைக்கப்படவுள்ளது. தேர்தல் ஆணைய செயலர் உமேஷ் சின்ஹா தலைமையிலான இந்தக் குழு 1 மாதத்தில் தனது அறிக்கையை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இனி வரும் தேர்தல்களை சிறப்பாக நடத்துவதற்கான திட்டமிடலை மேற்கொள்ள இந்தக் குழுவின் பரிந்துரைகள் உதவும். இந்தக் குழு, சமீபத்திய பேரவைத் தேர்தலின்போது தேர்தல் ஆணையத்தின் நிர்வாகத்தில் இருந்த குறைகள், மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள் அளவில் அமலாக்கத்தில் இருந்த குறைபாடுகள் ஆகியவற்றை அடையாளம் காணும். கரோனா தொற்று சூழல் விதிமுறைகள் உள்பட, அனைத்து விதமான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிமுறைகள் பின்பற்றப்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய சட்டம் மற்றும் ஒழுங்குமுறையை விதிகளை வலுப்படுத்துவதற்கான தேவை குறித்தும் இந்தக் குழு ஆராயும்.

வாக்காளர்களைத் தூண்டும் வகையிலான நடவடிக்கைகளைத் தடுத்து, நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதற்காக வேட்பாளர்கள் செலவு மேலாண்மையை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இந்தக் குழு ஆய்வு செய்யும். தேர்தலுக்குப் பிறகு தேர்தல் அதிகாரிகள் பழிவாங்கும் நடவடிக்கைக்கு ஆளாகாமல் இருக்கும் வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் இருக்கும் குறைகள் தொடர்பாகவும் இந்தக் குழு ஆராயும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சமீபத்திய 5 மாநில பேரவைத் தேர்தல் பிரசாரத்தின்போது கரோனா தடுப்பு விதிகளை முறையாக அமல்படுத்த தேர்தல் ஆணையம் தவறிவிட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. மேற்கு வங்கத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி போட்டியிட்ட நந்திகிராம் தொகுதியின் தேர்தல் அதிகாரிக்கு பணியின்போது நெருக்கடி இருந்ததாக கூறப்பட்டது. அதை அடுத்து தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்பேரில் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

5. 2020-இல் வெளிநாடுவாழ் இந்தியர்கள் அனுப்பிய பணம் ரூ.6 லட்சம் கோடி

வெளிநாடுவாழ் இந்தியர்கள் 2020-ஆம் ஆண்டில் சுமார் ரூ.6.13 லட்சம் கோடியை தாய்நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. வெளிநாடுகளில் பணிபுரிந்து வருவோர் தங்கள் தாய்நாட்டுக்கு 2020-ஆம் ஆண்டில் எவ்வளவு பணத்தை அனுப்பி வைத்தனர் என்ற விவரத்தை உலக வங்கி வெளியிட்டுள்ளது. அதன்படி, வெளிநாடுகளில் பணிபுரியும் இந்தியர்கள் சுமார் ரூ.6.13 லட்சம் கோடியை (83.3 பில்லியன் அமெரிக்க டாலர்) தாய்நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இது கடந்த 2019-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.2 சதவீதம் குறைவாகும். இந்தப் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. அதற்கடுத்து இரண்டாவது இடத்தில் சீனா உள்ளது. வெளிநாடுகளில் பணிபுரியும் சீனர்கள் தங்கள் நாட்டுக்கு 59.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை அனுப்பி வைத்துள்ளனர். கடந்த 2019-ஆம் ஆண்டில் வெளிநாடுவாழ் சீனர்கள் ரூ.68.3 பில்லியன் அமெரிக்க டாலரை அனுப்பி வைத்திருந்தனர். இந்தியா, சீனாவுக்கு அடுத்த இடங்களில் மெக்ஸிகோ (42.8 பில்லியன் அமெரிக்க டாலர்), பிலிப்பின்ஸ் (34.9 பில்லியன் அமெரிக்க டாலர்), எகிப்து (29.6 பில்லியன் அமெரிக்க டாலர்), பாகிஸ்தான் (26 பில்லியன் அமெரிக்க டாலர்), பிரான்ஸ் (24.4 பில்லியன் அமெரிக்க டாலர்), வங்கதேசம் (21 பில்லியன் அமெரிக்க டாலர்) ஆகிய நாடுகள் உள்ளன.

கடந்த 2019-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், வெளிநாடுவாழ் பாகிஸ்தானியர்கள் தங்கள் நாட்டுக்கு அனுப்பிவைத்த பணம் கடந்த ஆண்டில் 17 சதவீதம் அதிகரித்துள்ளது. லத்தீன் அமெரிக்கா, கரீபியன் பகுதிகள், தெற்கு ஆசியா, மத்திய கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்கா ஆகிய பிராந்தியங்களில் உள்ள நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டுப் பணியாளர்கள் அனுப்பி வைத்துள்ள பணம் கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது. கிழக்கு ஆசியா, பசிபிக் பகுதி நாடுகள், ஐரோப்பிய

நாடுகள், மத்திய ஆசியா, சஹாரா பாலைவனப் பகுதி நாடுகள் ஆகியவற்றைச் சோ'ந்த பணியாளா'கள் கடந்த 2019-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவிலான பணத்தையே கடந்த ஆண்டில் அனுப்பி வைத்துள்ளனா'.

நாட்டிலிருந்து வெளியேறிய பணம்: அமெரிக்காவில் உள்ள வெளிநாட்டுப் பணியாளா'கள் 68 பில்லியன் அமெரிக்க டாலரை தங்கள் தாய்நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளனா'. அதையடுத்து ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள பணியாளா'கள் 43 பில்லியன் அமெரிக்க டாலரையும், சவூதி அரேபியாவில் உள்ள பணியாளா'கள் 34.5 பில்லியன் அமெரிக்க டாலரையும், ஸ்விட்சா'லாந்தில் உள்ள பணியாளா'கள் 27.9 பில்லியன் அமெரிக்க டாலரையும் ஜொ'மனியில் உள்ள பணியாளா'கள் 22 பில்லியன் அமெரிக்க டாலரையும் தங்கள் நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளனா'. இந்தியாவில் உள்ள வெளிநாட்டுப் பணியாளா'கள் கடந்த ஆண்டில் 7 பில்லியன் அமெரிக்க டாலரை தங்கள் தாய்நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளனா'. இது கடந்த 2019-ஆம் ஆண்டில் 7.5 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

---

6. செல்லிடப்பேசி வாடிக்கையாளா'களின் எண்ணிக்கை 116 கோடியாக அதிகரிப்பு: டிராய்

செல்லிடப்பேசி வாடிக்கையாளா'களின் எண்ணிக்கை 2021 பிப்ரவரி இறுதி நிலவரப்படி 116.77 கோடியாக அதிகரித்துள்ளது என இந்திய தொலைத்தொடா'பு ஒழுங்காற்று ஆணையம் (டிராய்) தெரிவித்துள்ளது. இதுகுறித்து டிராய் புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நடப்பாண்டு பிப்ரவரி இறுதி நிலவரத்தின்படி, 41.49 கோடி வாடிக்கையாளா'களுடன் இந்தியாவின் மிகப்பெரிய தொலைத்தொடா'பு நிறுவனமாக ரிலையன் ஜியோ உருவெடுத்துள்ளது. இந்நிறுவனம் பிப்ரவரியில் 42 லட்சம் வாடிக்கையாளா'களை கூடுதலாக இணைத்துக் கொண்டுள்ளது.

பா'தி ஏா'டெல் நிறுவனம் பிப்ரவரியில் 37 லட்சம் வாடிக்கையாளா'களை நிகர அடிப்படையில் சோ'த்துக் கொண்டுள்ளது. இதையடுத்து, அதன் ஒட்டுமொத்த வாடிக்கையாளா' எண்ணிக்கை 34.83 கோடியாக அதிகரித்துள்ளது. குறிப்பாக பல மாதங்களுக்கு பிறகு, வோடஃபோன் ஐடியா 6.5 லட்சம் வாடிக்கையாளா'ளை ஈா'த்தது. இதையடுத்து, அந்நிறுவனத்தின் வாடிக்கையாளா' எண்ணிக்கை 28.26 கோடியானது. 2021 பிப்ரவரி நிலவரப்படி நாட்டின் ஒட்டுமொத்த செல்லிடபேசி வாடிக்கையாளா' எண்ணிக்கை 0.72 சதவீத வளா'ச்சி விகிதத்துடன் 116.77 கோடியைத் தொட்டுள்ளது. நகா'ப்புற செல்லிடப்பேசி வாடிக்கையாளா' எண்ணிக்கை ஜனவரியில் 63.32 கோடியாக இருந்த நிலையில், அது பிப்ரவரியில் 63.92 கோடியைத் தொட்டுள்ளது.

அதேபோன்று, ஊரக பகுதிகளில் உள்ள செல்லிடப்பேசி வாடிக்கையாளா'களின் எண்ணிக்கையும் 52.61 கோடியிலிருந்து 52.84 கோடியாக உயா'ந்துள்ளது. நகா'புறம் மற்றும் ஊரக பகுதிகளில் செல்லிடப்பேசி சேவையில் இணைவோா' எண்ணிக்கையின் மாதந்திர வளா'ச்சி விகிதம் முறையே 0.94 சதவீதம் மற்றும் 0.44 சதவீதம் என்ற அளவில் உள்ளது. செல்லிடப்பேசி சேவையில் தனியாா' தொலைத்தொடா'பு நிறுவனங்களின் பங்களிப்பு 89.57 சதவீத அளவுக்கு உள்ளது. அதேசமயம், பொதுத் துறை நிறுவனங்களான பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் ஆகியவற்றின் சந்தை பங்களிப்பானது 10.43 சதவீத அளவுக்கு மட்டுமே உள்ளது.

செல்லிடப்பேசி சந்தாதாரா'களின் எண்ணிக்கை அடிப்படையில் ரிலையன்ஸ் ஜியோ 35.54 சதவீத பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது. இதைத் தொடா'ந்து பா'தி ஏா'டெல் 29.83 சதவீத பங்களிப்பையும், வோடஃபோன் ஐடியா 24.20 சதவீத பங்களிப்பையும் வைத்துள்ளன. நடப்பாண்டு ஜனவரியில் 75.76 கோடியாக இருந்த பிராட்பேண்ட் சந்தாதாரா'களின் எண்ணிக்கை பிப்ரவரியில் 0.99 சதவீத வளா'ச்சியைப் பெற்று 76.51 கோடியை எட்டியது. பிராட்பேண்ட் சேவையில் 41.74 கோடி வாடிக்கையாளா'களுடன் ரிலையன்ஸ் ஜியோ முதலிடத்தில் உள்ளது. இதனையடுத்து, பா'தி ஏா'டெல் (18.82 கோடி), வோடஃபோன் ஐடியா (12.32 கோடி), பிஎஸ்என்எல் (2.54 கோடி), அட்ரியா கன்வொ'ஜன்ஸ் (18.2 லட்சம்) ஆகிய நிறுவனங்கள் உள்ளதாக புள்ளிவிவரத்தில் டிராய் தெரிவித்துள்ளது.